# சென்னையில் 'இராம ராஜ்யம்'!


திராவிடநாடு

மலர் 9 | 29-10-50 | இதழ் 19

இலங்கை 15 சதம்] [விலை அணா இரண்டு


## பொதுமக்கள்மீது தடியடி

## பலருக்குப் படுகாயம்

### கழகத் தோழர்கள் கைது

### 'அகிம்சா ஆட்சியின்' தர்பார்!

### குழந்தைகள் கதறிய காட்சி!

### டில்லி மந்திரிவருகையின் பரிசு!!

வண்ணப் புறாவைக் காண, வல்லூறு சும்மாயிருப்பதில்லை, பசுவைக் கண்டால் புலி பாயத்தான் செய்யும், எலிக்கும் பூனைக்கும் எப்போதும் ஒத்து வராது—இது சகஜம்.

ஒன்றையொன்று எதிர்த்துப் பாய்ந்து, வீழ்த்தப் போரிடும். ஆனால், அங்கு, பசுமீது பசுவே பாய்ந்தது! வண்ணப் புறாவின் கூட்டைச் சேர்ந்த மற்றொரு புறாவே கொத்தித் தூரத்திற்று! பசு உரு மாறிற்று!—பச்சாதாபம், பரிதாபம் எதுவுமில்லாத இரத்த வெறிகொண்ட புலி போலப் பாய்ந்தனர்—அடித்தனர்—வீழ்த்தினர்—வதைத்தனர்!



மலை குலைந்தாலும் மனங் குலையா பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், தடியடி தாங்காது, கண் கலங்கும் காட்சி! சிறு குழந்தையின் முகத்தையும் பாருங்கள்!

குதிரைகளின் குளம்படிச் சப்தம், வேழங்களின் அலறல், விரோதிகளின் விலாவிலே பாய்ச்சிய அம்பால் ஏற்படும் கூக்குரல், சிந்தும் இரத்தத்தைச் சிறுநரிகள் நக்கிக் குடிக்கும்போது உண்டாகும் ஊளை—அத்தனையும் காணப்படுமாம், தமிழகத்தின் வீரர்கள், பண்டைய நாட்களில் விரோதிகள்மீது பாய்ந்து, படையெடுக்கும் பொழுது.

சென்னையில் 24–10–50 அன்று, 'அவர்கள்' படையெடுக்கவில்லை—ஆனால், அந்தக் காட்சி தென்பட்டது. குதிரைகளின் குளம்படிச் சப்தம், அதன்மீது அமர்ந்து மக்கள் மத்தியில் பாய்ந்து செல்லும் 'காங்கிரஸ் அதிகார அம்பு'களின் 'ஓடு! ஓடு!!' என்ற ஓங்காரக் குரல், தடியடிக்கு ஓயாது வேலை கொடுத்ததால் 'படார், புடார்' என உடைந்த மண்டைகளின் சப்தம், ஓடமுடியாது தேம்பித் திகைத்த சிறு குழந்தைகளின் அலறல், சிங்கத்தின் மத்தியில் சிக்கியமான் போல் மருண்டு வீழ்ந்த மங்கையர் குரல், 'அடிக்காதே! அய்யய்யோ!!' என்று கூக்குரல் போட்ட கிழவிகளின் ஒலம்—அத்தனையும் கேட்டது.

தாக்கியோர் விரோதிகளல்ல! வேற்று நாட்டிலிருந்து வந்து இந்நாட்டை முற்றுகையிட்டோருமல்ல! எங்கிருந்தோ வந்து புகுந்த எதிரிகளுமல்ல! இங்கேயே பிறந்தவர்கள், இந்த நாட்டிலேயே வாழ்பவர்கள்—வாழப்போகிறவர்கள்! ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் — சகோதரர்கள்!

எனினும், அடித்தார்கள். 'அதிகார அம்புகள்' மூலம் அடித்தார்கள்! இரக்கமெனும் பொருள் இதயத்தில் இல்லாதவர் போல அடித்தார்கள்! அடித்தார்கள்!! அடித்தார்கள்!!! அடித்துக் கொண்டேயிருந்தார்கள்!!!!

கொடுங்கோலனும் கூசும், இக்கொடுமைச் செயலுக்குக் காரணமாயிருப்போர் குரூபிகளல்ல—குடும்ப வாழ்க்கையைத் துறந்தவர்களல்ல! அண்ணன் தம்பிகளோடு பிறந்தவர்கள், ஆசை முகங்காட்டும் மனைவி, அன்பை அள்ளி வீசும் தாய், அருமையோடு போற்றும் தங்கை, தத்தை மொழியால் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் குழந்தைக் கிளிகள் — ஆகியவர்களோடு வாழ்பவர்கள்! பெண்ணின் பெருமை தெரியும் அவர்களுக்கு. பெரியோரைப் போற்ற வேண்டும் என்ற புத்திமதிகளைப் படித்தவர்கள் தான். "கனவிலும் கருதாதே கன்னியருக்குப் பொல்லாங்கு செய்ய" என்ற விவேக சிந்தாமணி, அவர்களுக்குத் தெரியும். ஆனாலும் அடித்தார்கள்! இதயத்தை இரும்பாக்கிக் கொண்டவரும் கூசும் "கொடுமை"களால் தாக்கினர்!

பெண்களைத் தாக்கினர்!

நரைத்த மூதாட்டிகளைத் தாக்கினர்!

நல் இளம் காளைகளைத் தாக்கினர்!

"வெய்யில் சுட்டாலே வெம்பி விழும் மலர்க்குலம் போன்றவர்கள் பெண்கள். அவர்களைத் தெய்வமெனப் போற்று, நினைப்பளவும் தீங்கு செய்ய நினையாதே—பெண் சாபம் பொல்லாது!" என்று பேசும், பாகவத சிரோன்மணிகள் சிஷ்யர்கள்தான் அவர்கள்! இருந்தும், பெண்களைத் தாக்கினர்! கீழே விழுந்து கெஞ்சியபோதும் விடவில்லை—தாக்கினர்!

துள்ளித் திரிந்து பள்ளி செல்லும் பருவத்தினரை, 'காடு வாவா வீடுபோ, போ' என்றழைக்க உலவும் கிழவிமார்களை, வயது முதிர்ந்தோரை, வழிப்போக்கரை, வந்தவர் போனவரை, வழியில் கண்டோரை—எல்லாம் தடியால் அடித்துத்தாக்கினர்! அடி—தள்ளு—உதை என்று, அவர்களது கால் பூட்சுகளும், கைத்தடிகளும், வேலை செய்து [illegible]! விசிறிக்கைகளோடு மேலும்

வீரர்களுக்குக் கூட இருக்காத அவ்வளவு வீராவேசம்—ஆனால், அவர்கள் 'தடியடி தர்பார்' நடத்தியபோது இருந்தது!

இரத்தம்!—மனித இரத்தம், மண்ணிலே சிந்திற்று. நெற்றியிலே வழிந்தோடி, துயரக் கண்ணீரோடு கலந்து, கருவிழ மேனியை எல்லாம் செம்பாக்கிற்று!

விரோதியின் வாள் வீச்சிலும், வெஞ்சமர் வேகத்திலும் சிந்தவேண்டிய இரத்தம்—வீணாகச் சிந்திற்று!

இரத்தம் — ஒரு விலைபோகுமல்ல, மனித வாழ்வின் ஜீவசக்தி. அது சிந்திற்று—சிந்தும்படிச் செய்யப்பட்டது!

சகிக்காத சம்பவம்! காணப்படாத காட்சி! கொதிப்பூட்டும் நிகழ்ச்சி! வேதனையூட்டும் விசித்திரம்—ஆனாலும் நடந்தது!

ஒரே ஒரு ஆள் அந்தஸ்து காப்பாற்றப்படுவதற்காக நடந்தது. மனித சமுதாயத்தின் ஒரு தனி நபருடைய 'மந்திரிப்பெருமை'க்காக மனிதக் கூட்டத்தின் பலருடைய கால்கள் ஒடிந்தன, கைகள் முறிந்தன, முதுகுகள் வீங்கின, மண்டைகள் உடைந்தன, மார்புகளிலே காயம்—இரத்தம்! இரத்தம்!! இரத்தம்!!!

நெஞ்சு கொதிக்கும் நிகழ்ச்சி, பசுவே பசுவைத் தாக்கிச் சிதைக்கும் பரிதாபக்காட்சி—எனினும் நடந்தது.



தடியடி தர்பாருக்குமுன் மக்கள் அணிவகுத்து நிற்கும் காட்சி

24—10—50 காலையிலும் மாலையிலும் சிங்காரச்சென்னையின் வீதிகளிலே நடந்தது. காந்தியார் பெயரைச் சொல்லித் திரியும் 'கண்ணிய வான்கள்' ஆட்சியிலே நடந்தது. காங்கிரஸ் மந்திரிமார்களின் ஆட்சியிலே, [illegible] பெற்ற சுதந்திர [illegible] நடந்தது. [illegible] என்று [illegible] 'மகோன்னதமான வாய்ப்புகளும்' [illegible] ஆட்சியிலே நடந்தது.

காங்கிரஸ் பெயர் சொல்லி, [illegible]

(௫-ம் பக்கம் பார்[illegible])

# சென்னை சிறையில் 'எதிர்கால உலகம்'!

## வீர மரபினர் வெஞ்சிறை புகுந்தனர்!

## 37 செயல் வீரர்களுக்குக் காவல் தண்டனை

### புன்சிரிப்போடு புகுந்தனர் சிறைக்குள்!

24—10—50 அன்று டில்லிமந்திரி ஆச்சாரியாருக்குத் திராவிடத்தின் அதிருப்தியைக் காட்டும் நோக்குடன் கருப்புக்கொடிகளைத் தாங்கிச் சென்றிருந்த பல்லாயிரக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தொண்டர்களில், அகப்பட்டோரையெல்லாம் ஆங்காங்கு காங்கிரஸ் அரசாங்கம் கைது செய்து, போலீஸ்டேஷன்களுக்குக் கொண்டுபோயினர். அவர்களில் பலரை பிறகு வெளியே போகுமாறும் விட்டுவிட்டு, கீழ்க்கண்ட 34 தோழர்கள்மீதும், போலீசாரால் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

மேற்படி தோழர்கள்மீது, ஆபாசமானவார்த்தைகளை பேசியதாகவும், போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவித்ததாகவும், கல்லெறிந்ததாகவும், பலகுற்றச்சாட்டுகளைப் போலீசார் காட்டினர்.

25—10-50 புதன்கிழமை காலை 11மணிக்கு சென்னை முதல் மாகாண மாஜிஸ்டிரேட் முன்னிலையில் மேற்படி தோழர்கள் கொண்டுவரப்பட்டனர். அங்கு, சிறிதுநேரம் விசாரணைசெய்யப்பட்டபோது, தங்கள்மீதும் கூறப்படும் குற்றங்கள் சரியல்லவென்றும் தாங்கள் அமைதியான முறையில் கருப்புக்கொடி பிடிக்கச்சென்றிருந்ததாகவும் தோழர்கள் கூறவே, மேற்படி வழக்கின் விசாரணையை மூன்ருவது மாகாண மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பினர்.

கோர்ட்டில் இராயப்பேட்டை வட்டம் போலீஸ் சப்இன்ஸ்பெக்டரும், மயிலாப்பூர் வட்டம் போலீஸ் அதிகாரியும், ஆஜராகியிருந்தனர்.

போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டார்களென தோழர்கள், டி. கோவிந்தன், அ. தர்மலிங்கம் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டது.

அதற்கு தோழர்கள், தாங்கள் நடைபாதையில் அமைதியாகச் சென்றுகொண்டிருந்ததாகவும் தங்கள் நோக்கம் ஆச்சாரியாருக்கு கருப்புக்கொடி காட்டுவதுதானென்றும் கூறினர்.

அதன்பேரில், அவர்கள் வழக்கு விசாரணை 7—11—50க்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிறகு கொண்டித்தோப்பு, ராஜகோபால், சம்பந்தம், மயிலை ப. சானகிராமன் ஆகியோர்மீது கெட்டவார்த்தைகளைப் பேசியதாகவும், போக்குத் தடை செய்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. "அதுஉண்மையா?" என்று மாஜிஸ்டிரேட் கேட்டதற்கு, "அதுபோல் தாங்கள் நடந்ததில்லையென்றும், தங்கள் அதிப்தியைக் காட்ட கருப்புக்கொடி தாங்கியிருந்ததாகவும்" தோழர்கள் பதில்கூறினர். அதன்மீது வழக்கு விசாரணை 7—11—50க்குஒத்திவைக்கப்பட்டது.

பிறகு, ஆபாசமான வார்த்தைகளை பேசியதாகவும் கல்லெறிந்ததாகவும் தோழர்கள் ராயபுரம் ஆர். பக்தவச்சலு, ராயபுரம் எ. ராஜு, ரூளை விசுவநாதன்மீது குற்றம்சாட்டப்பட்டிருப்பதுபற்றி மாஜிஸ்டிரேட் கேட்டார்.

#### "அங்கு" ஏது?

"இல்லை! அதுபோல நாங்கள் எந்த கடவடிக்கையிலும் ஈடுபடுபவர்களல்ல. எங்கள் கழகத்திட்டப்படி, கருப்புக்கொடி காட்டவே போயிருந்தோம். பிடித்து வந்துவிட்டார்கள்" என்று பதில் தந்தனர். ஒரு தோழர், "தார் ரோடில் ஏதுங்க, கல்?" என்று கேட்டபோது, கோர்ட்டில் கூடியிருந்தோரெல்லாம் நகைத்தனர்.

மேற்படி மூன்று தோழர்கள் வழக்கும் 7—11—50-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதன்பிறகு, கூட்டமாகக்கூடிநின்று போக்குவரத்தைத் தடைசெய்ததாகவும், உணவுப் பங்கீட்டுக்கடைக்கெதிரில்நின்றுகொண்டுவந்துபோகுபவர்களுக்குத் தொல்லை தந்துகொண்டிருந்ததாகவும் ஓட்டேரி எ. ஜி. சம்பந்தம், ராயபுரம் குப்பராஜு, பாலகதிரவன், ஐபஞவரம் பாலசுப்பிரமணியன் ஆகியோர்மீது, குற்றஞ்சாட்டப்பட்டது.

தோழர்கள் மேற்படி குற்றங்களை மறுத்து, "நாங்கள் எங்கள் அதிருப்தியைக் காட்டவே போனோம்" என்றார்கள்.

மாஜி:- என்ன கொடி காட்ட......?

பதில்:- கருப்புக்கொடி—எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கக் காட்டப்படவேண்டுமென்பது எங்கள் கழக முடிவு. அதன்படி காட்டப் போனோம்.

மாஜி:- சி. ஆர். இங்கிருந்துபோய் அங்கு மந்திரியாக இருப்பவர்தானே?

பதில்: ஆமாம். ஆனால் வடநாட்டு ஆட்சிக்கு ஒத்தாசையாகவல்லவா இருக்கிறார். யாராயிருந்தாலும் எங்களது கோரிக்கையான 'திராவிடநாடு திராவிடருக்கே'என்பதற்குஎதிரிடையாகஇருக்கும் டில்லி மந்திரிகளுக்கு கருப்புக்கொடி காட்டி, எங்களது ஆசையைத் தெரிவித்துக்கொள்வதென்பது எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முடிவு.

**ராமராஜ்யக் காட்சி!**

—

★ படுகாயமடைந்தோர் 83

★ கைதுசெய்யப்பட்டோர் 64

★ சிறைக்குள் கிடப்போர் 37

**ஆச்சாரியார் பரிசு!**

மாஜி: அதற்காக......

பதில்: கருப்புக்கொடி காட்டப் போனோம் ஆச்சாரியார் மீது எங்களுக்கு, சொந்த விஷயத்தில் வெறுப்பில்லை. இப்போதுகூட எங்கள் நாட்டுக்குச் சேவை செய்ய, தமது பதவியை ராஜினமா செய்துவிட்டு வந்தாரேயானல் வரவேற்கத் தயார்!

என்று, தெளிவாகத் தோழர்கள் விளக்கினர். பிறகு அவர்கள் வழக்கும் 7—11—50 அன்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படுமென மாஜிட்டிரேட் அறிவித்தார்.

பிறகு தோழர்கள் ஜி எஸ். சம்பந்தம், பா. தங்கலிங்கம், கே. ஜயராம், டி. மகாதேவன், எம். சிவலிங்கம், பி. வடிவேலு, கே. ராஜு, ஆர். வாசுதேவன், பி. சுந்தரம், எஸ். பி. அழகரசு, கே. வி. கே. சாமி, சாந்தமூர்த்தி ஆகியோர் மாஜிஸ்டிரேட் முன் கொண்டுவரப்பட்டனர். போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்ததாகவும், நகரில் போட்டிருக்கும் தடையுத்திரவை மீறும்வகையில் கூடி நின்றதாகவும், அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

தோழர்கள் மேற்படி குற்றச்சாட்டை மறுத்ததோடு தாங்கள் அமைதியாக கருப்புக்கொடி பிடிக்கவே போனதாகவும் தெரிவித்தனர். இவர்களது வழக்கு 6—11—50 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென அறிவித்தார்.

மேலே குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைச் சாட்டப்பட்ட தோழர்களை ஜாமீனில் வெளியே போகத் தயாரானல் தாம் விடுவதாகவும்—இல்லையென்றால் அதுவரையில் ரிமாண்டில் வைக்கப்படுவார்களென்றும் கூறினர்.

#### அது, முடியாதே!

தாங்கள் ஜாமீனில் செல்லத் தயாராக இல்லை என்று எல்லாத் தோழர்களும் ஒருமித்துக் கூறினர்.

அடுத்தபடியாக மேலும் பதினொரு தோழர்கள், போக்குவரத்துக்கு இடைஞ்சல விளைவித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு கொண்டுவரப்பட்டனர். அவர்கள்: காஞ்சிபுரம் கே. டி. எஸ். மணி, வி. பரமசிவம், கே. வடமலை, கே. பி. கணபதி, எம். ராதாகிருஷ்ணன், அப்துல்லா, ஆர். டி. சாமி, பி. லோகநாதன், ஜி. கன்னியப்பன், பி. கே. கபாலி, ஆகியோர். இவர்கள், ஆபாசமான வார்த்தைகளால் தூஷணை செய்துகொண்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

தங்கள்மீது இந்தக் குற்றங்கள் வேண்டுமென்றே சாட்டப்படுகிறது என்று கூறி தோழர்கள் மறுத்ததோடு, தாங்கள் ராயப்பேட்டை சென்றதன் நோக்கம் கருப்புக்கொடி காட்டி, தங்கள் அதிருப்தியை ஆச்சாரியாருக்குக் காட்டத்தான் என்பதாகத் தெரிவித்தனர்.

இதைக் கேட்ட மாஜிஸ்டிரேட் வழக்கை 6–11–50-க்கு ஒத்திவைப்பதாகக் கூறினர்.

#### 'காவலில்' இருப்போம்!

பிறகு, தோழர்களை ஜாமீனில்போகிறீர்களா என்று மாஜிஸ்டிரேட் கேட்டதற்கு தோழர்கள் தாங்கள் ஜாமீனில் போகத் தயாரில்லையென்று கூறினர்கள்.

"ஜாமீனில் போவதென்றால் பணம் கட்ட வேண்டாம். எழுதித் தந்துவிட்டாலே போதும். விட்டுவிடுகிறேன். வழக்கு விசாரணைக்கு வந்துவிடுங்கள். போகிறீர்களா?" என்று கடைசியாக தோழர்களை, மாஜிஸ்டிரேட் கேட்டார்.

தோழர்கள் அனைவரும் தாங்கள் வழக்கு முடியும் வரை காவலிலேயே இருப்பதாக, புன்சிரிப்போடு, கூறினர்.

கடைசியாக, மேற்படி தோழர்களின் வழக்கு விசாரணையும் 6—11—50க்கு போடப்பட்டிருப்பதாகக் கூறினர்.

பிறகு, அனைவரையும் அதுவரையில் காவலில் வைக்குமாறு உத்திரவு பிறப்பித்தார்.

கோர்ட் அறையைவிட்டு வெளியே போகும்போது நமது தீரர்கள் காட்டிய உணர்ச்சி வேகம், கிழவனையும் குமரனுக்கும்! அமைதியோடு சாந்தமாக, கோர்ட்டிற்கு வந்து குழுமியிருந்த கழகத் தோழர்களிடம் கைகூப்பி சென்று வருகிறோம்' என்று விடைபெற்ற காட்சி, இரும்பு நெஞ்சத்தையும் உருக்கிவிடும். "அருமையான வீரர்கள், தமிழ் வீரத்தின் சின்னங்கள், அன்புச் சகோதரர்கள்" என்ற பேரார்வம் நமது இதயத்தில் வீசி, ஆனந்தக் கண்ணீர் வடிக்கச் செய்தது!

தோழர்கள் நெடுஞ்செழியன், கே. எ. மதியழகன், இராம. அரங்கண்ணல், திருச்சி முத்துகிருஷ்ணன், டி. எம். பார்த்தசாரதி, பஞ்சாட்சரம், சி. வி. ராஜன், சிந்தாதிரிப்பேட்டை கபாலி, எஸ். வி. லிங்கம், பெத்துநாயக்கன்பேட்டை சிவஞானம், நமசிவாயர் ஆகியோர் காலை 10-மணி முதல் கோர்ட்டிலேயே இருந்து, எல்லா நடவடிக்கைகளையும் கவனித்துக்கொண்டிருந்தனர்.

தோழர் பஞ்சாட்சரம் சிறைக்கஞ்சா சிங்கங்களுக்கு என்னென்னவேண்டும் என்று கேட்டு, அவைகளை வாங்கிவந்து உபசாரம் செய்தார்.

சுமார் ஒருமணிக்கு, 34-கழகக்காளைகளும் போலீஸ் லாரியில் ஏற்றப்பட்டனர். நகைத்த முகத்தோடு, குழுமிக்கிடந்த கூட்டத்தினரிடம் 'கைகூப்பி' வணக்கம் செலுத்திக்கொண்டு, போலீஸ் லாரியில் ஒவ்வொருவராய் ஏறினர்.

போலீஸ் லாரி மவுண்ட்ரோட் வழியாக சென்ட்ரல் ஸ்டேஷன் அருகிலுள்ள பெனிடென்ஷியரி சிறைக்குச் சென்றது.

#### இலட்சிய கீதம்!

வழிநெடுக, லாரியில் இருந்தபடியே "வடநாட்டாதிக்கம் ஒழிக" "திராவிடநாடு திராவிடருக்கே!" "அடக்குமுறை ஆட்சி ஒழிக!" என்பதான இயக்கமுழக்கங்களை, உணர்ச்சியோடு எழுப்பிக்கொண்டு சென்ற காட்சி மவுண்ட்ரோடையே கலக்கிவிட்டது.

சிறைச்சாலை அதிகாரிகளிடம் உத்திரவைக் காட்டி உள்ளே அனுப்ப சிறிது அவகாசம் இருந்தபடியால் அனைவரும் வெளியில் உட்கார வைக்கப்பட்டனர்.

தோழர்கள் அனைவரும் இன்னும் சாப்பாடு இல்லாமலிருப்பதை யறிந்த தோழர் அரங்கண்ணல், போலீஸ் அதிகாரிகளிடம், அனைவருக்கும் உணவு வசதி செய்துதர, அனுமதி கேட்டார். அவர்களும் ஒப்பவே, பெத்துநாயக்கன்பேட்டை

(அடுத்த பக்கத்தில்)

# தியாகத் தீயில்-திராவிட வீரர்கள்

## பட்டியல் காணீர்-பரிதாபம் கேளீர்!

### அடித்து நொறுக்கிய தொகையினைப் பாரீர்!

### ஐயகோ, இதுதான் 'அகிம்சா' ஆட்சியா!!

### அடிபட்டோர்:

காங்கிரஸ் ஆட்சியின் தடியடி தர்பாருக்கு ஆளாகி, படுகாயங்கள் பெற்ற நமது கழகத் தோழர்களின் பட்டியல். இவர்களில் சிலர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். பலர், கழகத் தொண்டர்களின் உதவியால் தங்கசாலைத் தெருவிலிருக்கும் நமது தலைமை நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டனர். காயங்களுக்குக் கட்டுப்போட்டும், மருந்து வகைகள் வாங்கித் தந்தும், படுக்கை வசதிகள் கொடுத்தும் சென்னை மாவட்ட கழகத்தின் சார்பில் மருத்துவ வசதிகள் நன்றாகவும் கவனிக்கப்பட்டன. உயர்தர டாக்டரும் அழைத்து வரப்பட்டு, முக்கிய மானவர்களுக்கு வேண்டிய வைத்திய உதவியும் தரப்பட்டது.

இந்தப் பட்டியலிலுள்ள பெயர்கள் — நமது நிருபருக்கு கிடைத்தவை. கிடைக்காத, காயமடைந்தோரின் பட்டியல் பெரிது! மிகப் பெரிது!!

டாக்டர் கணேசன்
பன்மொழிப் புலவர்
கா. அப்பாதுரையார், M. A., L. T.
அலமேலு அப்பாதுரை
செல்லக்கண்ணு அம்மாள்
முல்லை-வடிவேலு
கொண்டிதோப்பு அ. மு. மணி
இராயப்பேட்டை ப. சண்முகம்
,, கே. ராகவன்
பெரியமெட் எ. சொக்கலிங்கம்
ராயபுரம் எஸ். சிங்கராசு
சென்னை குப்புராமி
சேப்பாக்கம் இரா. நடேசன்
மண்ணடி ஷரீபு
,, எம். எ. ரஸாக்
வேப்பேரி எம். எ. ஜார்ஜ்
சென்னை ஜ. எஸ். ராதாகிருஷ்ணன்
மண்ணடி இரா. சண்முகம்
வண்ணாரப்பேட்டை சீனிவாசன்
புளியந்தோப்பு இளவரசன்
அமிஞ்சிகரை தண்டாயுதபாணி
நுங்கம்பாக்கம் என்.சி. கேசவராயன்
பெரம்பூர் கே. ராமதாஸ்
,, எஸ். சி. பாபு
ஓட்டேரி ஜி, சம்பத்குமார்
சென்னை இளையகோட்டை கரிகாலன்
முத்தியாலுப்பேட்டை
ஜி. சாரங்கன் (13 வயது)
படாளம் டி. பாபு
வண்ணையம்பதி-அருப்புக்கோட்டை
ச. மீ. ச. கிருஷ்ணன்
மவுண்ட்ரோடு டி. பொன்னுச்சாமி
திருவல்லிக்கேணி விஸ்வம் கோபால்
அய்னாவரம் ஜெயவேலு
திருவல்லிக்கேணி நீலநாராயணன்
,, செந்தாமரை
தேனாம்பேட்டை எ. திருநாவுக்கரசு
சூளை சோலை
வண்ணாரப்பேட்டை முருகேசன்
சென்னை ஏகாம்பரம்
சென்னை டி. வடிவேலு
ராயபுரம் வி. டி. சந்திரசேகரன்
மூலக்கொத்தளம் எஸ். எம்.
ஆனந்தன்
சென்னை கமலக்கண்ணன்
,, க. மதியழகன்
,, ஆ. மணிமன்னன்
,, கலைச்செல்வன்
"வால்டாக்ஸ்" சே. அ. மதியழகன்
ஓட்டேரி பாலகிருஷ்ணன்
எம். எஸ். எம். மொகதீன்
காஞ்சிபுரம் சி. வி. இராசகோபால்
(கவுன்சிலர்)
,, சபாபதி
சென்னை கண்ணபிரான்
திருவல்லிக்கேணி வேலப்பன்
சென்னை கார்ப்பரேஷன்
கவுன்சிலர் முனுசாமி
ஏகாம்பரம்
சீனுவாசன்
புருஷோத்தமன்
அன்புமணி
மாரிமுத்து
மதுரை முத்து
ராமலிங்கம்
என். கிருஷ்ணன்
சென்னை ஆர். கிருஷ்ணன்
புரசை ஆ. ராமானுஜம்
,, வி. என். ராமச்சந்திரன்
கோமளீஸ்வரன்பேட்டை
எஸ். சின்னையா
,, நாராயணசாமி
,, நீலநாராயணன்
,, மதிவாணன்
எம். எஸ். காதர்
தா. கோவிந்தன்
ஜான்
பொன்முடி.
ஸேவியர்
இப்ராஹிம்
ஓட்டேரி என். எம். முருகேசன்
,, தாமோதரம்
,, நடராஜன்
,, லோகரட்சகன்
,, துரைராஜ்
,, முருகேசன்
,, அருள்தாஸ்
,, எ. ஷண்முகம்
,, ரங்கநாதன்
சேத்துப்பட்டு ஆ. சுப்பிரமணியன்
காஞ்சிபுரம் பெருமாள்
,, கண்ணன்
,, வேலப்பன்
,, எத்துராசு

### கைதாகி மீண்டோர்

ஆச்சாரியார் வரவால், அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு திராவிட முன்னேற்றக்கழகத் தீரர்களின் விபரம், இது. நமது நிருபர் தேடிச் சேகரித்தவை. இந்த விபரத்தில், கைக்கு வராத, தோழர்கள் பெயரும் இருக்கின்றன.

காங்கிரஸ் ஆட்சி கைது செய்தோர் பட்டியல் இது. 24—10—50 காலை சென்னைக் கோட்டைக்கருகிலும், மாலை ராயப்பேட்டையிலும் கைது செய்யப்பட்டவர்களின் விபரம் இது. இதில் கழக முன்னணி வீரர்கள் 25—10—50 நண்பகல் ஒரு மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

கே. கே. நீலமேகம்
கே. கோவிந்தசாமி
என். வி. நடராசன்
நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி
ஈ. வே. கி சம்பத்து
ஈழத்து அடிகள் பி. ஏ.
தில்லை-வில்லாளன் பி. ஏ. (ஆனர்ஸ்)
காஞ்சி. கவுன்சிலர்
சி. வி. ராசகோபால்
டாக்டர் கணேசன்
ஜலகண்டபுரம் ப. கண்ணன்
முல்லைக்கொம்மை வடிவேல்
போளூர் சுப்பிரமணியம்
கார்ப்பரேஷன்கவுன்சிலர் முனுசாமி
சென்னை கண்ணபிரான்
அகரம் டி. வி. சாமி
குறிஞ்சிப்பாடி சாம்பசிவம்
காஞ்சி சந்திரசேகரன்

இவர்கள் யாவரும் 151 I. P. C செக்ஷன் (Preventive Detention)படி, காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களோடு மேலும், கருப்புக்கொடி காட்டப்பட்ட வட்டாரங்களில் சென்றவர்களை யெல்லாம் மடக்கி போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச்சென்று, கொஞ்சநேரம் வைத்திருந்து விடுவித்தனர். அவர்கள் தொகை நூற்றுக் கணக்காகும்.

கைது செய்யப்பட்டோரில் கீழ்க்காணும் 34-தோழர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு இருக்கிறது. 25—10—50 அன்று சென்னை மூன்றாவது மாகாண மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு வந்தது அனைவரும் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

### சிறையிலே சிங்கங்கள்!

கருப்புக்கொடி காட்டச் சென்றபோது ஆளவந்தாரால் கைதுசெய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத் தீரர்களின் பட்டியல்:—

மயிலை கு. வடமலை
சதுரங்கப்பட்டினம் ச. ப. அழகரசு
வடசென்னை கே. வி. கே. சாமி
மயிலை ப. சானகிராமன்
ஜார்ஜ்டவுன் பா. தங்கலிங்கம்
கோடம்பாக்கம் ப. ஆ. சாந்தமூர்த்தி
கிருஷ்ணாம்பேட்டை நா.
இராதாகிருட்டினன்
சூளை விசுவநாதன்
அயன்புரம் இரா. பாலகதிரவன்
சூளை கே. பி. கஜபதி
வடசென்னை ரா. து. சாமி
புதுப்பேட்டை ஜி. கன்னியப்பன்
தென் சென்னை ரா. சம்பந்தம்
அய்னாவரம் லோகநாதன்
ராயபுரம் நா. து. மகாதேவன்
மயிலை வ. சுந்தரம்
புரசைபாக்கம் எம். சிவலிங்கம்
கொண்டிதோப்பு டி. ராஜகோபால்
ராயபுரம் என். குப்புராஜ்
திருவட்டீஸ்வரன்பேட்டை
டி. கே. கபாலி
ஓட்டேரி எ. ஜி. சம்பந்தம்
புரசைபாக்கம் டி. கோவிந்தன்
ஜார்ஜ்டவுன் ஜி. எல். சம்பந்தம்
கொத்தவால்சாவடி பி. வடிவேலு
,, கே. ஜயராமன்
,, கே. ராஜி
பழையவண்ணையம்பதி ஆர்.
பக்தவத்சலு
மூர்மார்க்கெட் எச். அப்துல்-
-ஹமீத்கான்
ராயபுரம் எஸ். பாலசுப்பிரமணியன்
மூர்மார்க்கெட் அ. தர்மலிங்கம்
ராயபுரம் எ. ராஜி
காஞ்சி கே. டி. எஸ். மணி
,, வி. பரமசிவம்
சென்னை ஆர். வாசுதேவன்

✱

(முன் பக்கத் தொடர்ச்சி)

சிவஞானம், நமசிவாயம் ஆகியோரோடு தோழர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளைக் கவனித்து செய்துதரப்பட்டன.

தோழர்களுக்கான எல்லா செலவுகளும், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தோழர்கள் அனைவரும் சிறைக்கு வெளியே வரிசையாக உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தபொழுது, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, பிரச்சாரக் குழுச் செயலாளரான இரா. நெடுஞ்செழியன், சட்டதிட்டக் குழுச் செயலாளரான கே. எ. மதியழகன் ஆகியவர்களோடு, சிறைக்கு வெளியிலிருந்த கழக வீரர்களைக் கண்டார்.

பொதுச் செயலாளரைக் கண்டதும் எல்லோரும் பூரிப்போடு 'வணக்கம்' கூறி வரவேற்றனர்.

யாவருக்கும் தனது அன்பு நிறைந்த வணக்கங்களைச் செலுத்திவிட்டு "வரட்டுமா?" என்று சி. என். ஏ. கூறிக்கொண்டு விடைபெற்றபொழுது "சென்றுவாருங்கள். தங்கள் தம்பிகளாகிய நாங்கள் எதற்கும் தயங்கோம்" என்று சிறை வாசலில் நின்று கூறியது, உணர்ச்சியூட்டக் கூடியதாயிருந்தது.

பொதுச்செயலாளர் விடைபெற்றுக்கொண்டு சென்ற சிறிதுநேரத்துக்கெல்லாம் சிறைக்கதவு திறந்தது. தேய்ந்த திராவிடத்தின் விடுதலை உருவங்கள், வெற்றிச் செல்வங்கள் ஒருவர்பின் ஒருவராக சிறைக்குள் சென்றனர். வெற்றிச்சிரிப்போடு நுழைந்தனர். "சுயராஜ்ய ஆட்சி"யின் சிறைக்கதவுகள் மூடிக்கொண்டக் காட்சி, உள்ளத்தைக் குலுக்கிற்று!

#### பல இடங்களிலும்

23—10—50 மாலை வண்ணாரப்பேட்டை தி. மு. க. தோழர் சி. எஸ். திராவிடமணி கருப்பு கொடி காட்டுவது சம்மந்தமான சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தபோது போலீசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். இதுபோல நகரின் பல பாகங்களிலும் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என தெரிகிறது. விபரம் பிறகு. (ந. நி)



# திராவிட நாடு

ஞாயிறு] 29—10—50 [காஞ்சி


## காணாத காட்சி

எதிர்ப்பு கோஷம் கூட கேட்கவில்லை; "ஒரு கருப்புக்கொடியும் பிடிக்கப்படவில்லை"

—தினசரி.

* * *

புலி கிளம்பினால், மானும் மயிலும் மருண்டோடி ஒளியுமாம்! காடு சஞ்சாரமற்றதாகக் காணப்படுமாம்!

அதுபோல இருந்தது 24—10—50 அன்று சென்னையில் சி. ஆர். சென்ற விடமெல்லாம். ஆச்சாரியார் தென்னாட்டைச் சேர்ந்தவர் ஆனால் டில்லி மந்திரி! அவர் வந்தார், மக்களைக்காண, மக்கள் மத்தியில் பேச. ஆனால், அவர் மக்களைக் காணவில்லை — மக்களும் அவரைப்பார்க்கவில்லை!

பாலைவனம் போலக் கிடந்தன, வீதிகள். போலீசாரே, எங்கும் நிரம்பிக்கிடந்தனர். மக்களை எதிர்பார்த்த மந்திரியை, போலீசாரின் கூட்டமே வரவேற்றது.

தடியடி! தாக்குதல்! இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஆயுதப் படை! ஏராளமான லாரிகள்! கைது! கலவரம்! இவைகள், அவரால், சென்னையிலே நிகழ்ந்தன. அவர் வருகையால், சென்னையே அலங்கோல மாயிற்று.

ஆச்சாரியார் எவருக்கும் விரோதியல்ல ஆனால் அவர் தாங்கிநிற்பது, டில்லி ஆட்சியை! ஆகவே, கருப்புக் கொடிக்காட்டி, தங்கள் இலட்சிய ஆசையைக் காட்டத் திட்டமிடப்பட்டது.

அது, அவர் கண்ணில் படாமல் தடுக்க, பட்டாளம் வந்தது! சர்க்காரின் பணமும் வாரிச் செலவிடப்பட்டது; சென்னை நகரமும், சின்னா பின்னப் பட்டது!

ஆச்சாரியாரின் வருகைக்கு அந்த அளவு பாதுகாப்பு—அல்ல! அல்ல!! அப்படிச் சொன்னால் ஆட்சியாளருக்குக் கோபம் வரும்— ஏற்பாடு செய்யப்பட்டது.

ஆச்சாரியார், சென்னைக்கு வந்த இரவு, நிம்மதியாகத் தூங்கியிருப்பார் என்று எவரும் எண்ணமுடியாது. படுக்கையில், அன்றைய காட்சிகள் அவர் இதயத்தைத் துளைக்காமலா இருந்திருக்கும்? 'என்னை வரவேற்க வேண்டிய மக்கள் இல்லை—ஆனால் மகத்தான போலீஸ் பாதுகாப்புடன் நான் உலவவேண்டியதாயிற்றே, எத்தனை மண்டைகள் உடைந்தனவோ, யாரார் என்னகெதி ஆனரோ!' என்ற துயரம், அவர் இதயத்தில் எழும்பாமலாயிருந்திருக்கும்!

துயரம் மட்டுமல்ல—அச்சமும் அவருக்கு உண்டாகியிருக்கும். 'நானும் மந்திரியாயிருந்து மாகாணத்தை ஆண்டேன். கவர்னராகவுமிருந்தேன்—கவர்னர் ஜனரலாகவும் விளங்கினேன். அப்போது கூட இவ்வளவு பாதுகாப்பு இருந்ததில்லை. இப்போதோ, நான் 'பொறுப்பில்லாத மந்திரி!' இருந்தும், இவ்வளவு எதிர்ப்பு இருக்கிறதே. இனி, எதிர்காலம், என்ன ஆகுமோ?" என்று, அவர் எண்ணாமல் இருந்திருக்கமாட்டார். ஏனெனில் அவர் ஒரு அரசியல் ஆருடக்காரர்!

மக்கள் சர்க்காரின் மந்திரி—ஆனால் அவர் மக்களைப் பார்க்கவில்லை! அந்த அளவுக்கு, கருப்புக் கோடி நாள், செய்துவிட்டது-ஆளவந்தாரை.

அவர் புலி அல்ல—ஆனாலும் அவர் பவனியை மக்கள், காணாவாறு தடுக்கப்பட்டனர், அவர் இருந்த இடம் நோக்கிப் போனோரையெல்லாம் தாக்கி!

இந்தக் காட்சி, டில்லி மந்திரியை, மகிழ்வித்திருக்காது. மாறாக, வேதனையையே தந்திருக்கும். அவரும் மனிதர்தானே!—கலங்கியே போயிருப்பார், தனக்கு சென்னை சர்க்கார் செய்த 'வரவேற்பு வைபவம்' கண்டு.

கருப்புக் கொடி பிடிப்பது—நமது உரிமை வேட்கையை 'டில்லி'யாருக்கு உணர்த்தவேதான். அந்த நோக்கம், எதிர்பாராத அளவில், பெருமிதமாக வெற்றியைத் தந்திருக்கிறது — இப்போது.

காங்கிரஸ் சர்க்காரின் தடியடி தர்பார்—மக்களையும் விழிப்புறச் செய்திருக்கிறது. வந்த மந்திரியாரின் இதயத்தையும் வேதனைக் காளாக்கியிருக்கிறது. இந்த வெற்றி மகத்தானது! திவாகர் கண்ட காட்சியின் எதிரொலியைவிட மகத்த[illegible]

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் நாள் இரவு நடைபெற்ற கழக செயற் குழுக் கூட்டத்திற்கு வந்திருந்த வெளியூர்த் தலைவர்களும், கழக முன்னணி வீரர்களும் ஆத்திரமடைந்து கிடந்த மக்களை அமைதியாகக் கலைந்து போகுமாறு கூறினர்.

இருந்தும், தங்கசாலை வீதியிலுள்ள கழகக் காரியாலயத்தின் முன் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடி நின்று 'ஒழிக, அடக்குமுறை!' என்று முழக்கமிட்டுக்கொண்டே இருந்தனர். இந்நிலையில் தடியடிக்கு ஆளாகி காயமடைந்தோருக்கெல்லாம் கழகத் தலைமை நிலையத்தில் மருத்துவ வசதிகள் செய்துதரப்பட்டுக்கொண்டிருந்தன. திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் சி-என்-ஏ., காயமடைந்தோரையெல்லாம் நேரில் கண்டு, விசாரித்து வேண்டியவைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

இந்நிலையில், நகரின் பல பகுதிகளிலிருந்தும் கிளைக்கழகச் செயலாளர்களும், கழக முன்னணி வீரர்களும்வந்து ஏராளமாகக் குழுமிவிட்டதோடு ஆத்திரத்தோடு இருந்தனர். அவர்களையெல்லாம் சாந்தப்படுத்தி மேற்கொண்டு செய்யவேண்டியவைகளை அமைதியானமுறையில் பலாத்காரமின்றி செய்யவேண்டுமென விளக்கிக்கூறி, யாவரையும் கலைந்துபோகும்படி கேட்டுக்கொண்டார். பொதுச் செயலாளர் வேண்டுகோளையொட்டி, திரண்டிருந்த மக்கள் யாவரும் கலைந்துகொண்டிருந்தனர்.

இதற்குள், தங்கசாலைத்தெரு முழுமையும் ஆத்திரமடைந்த மக்கள்கூடிக்கிடப்பதாகத் தகவல் கிடைத்ததன்பேரில் ஆயுதந்தாங்கிய போலீசு படைகளுடன் உயர்தர போலீசு அதிகாரிகள் கழகத்தலைமை காரியாலயத்துக்கருகில் வந்துநின்றனர். பிறகு பொதுச்செயலாளரைச் சந்தித்த போது "அமைதியானமுறையில் கழகத்தின் முடிவுகள் நிறைவேற்றப்படும். மாலையிலும் இராயப் பேட்டையில் கருப்புக்கொடிகாட்டப்படும்"என்று அறிவித்தார்.

போலிஸ்லாரிகளைக்கண்டதும் தலைவர்களைக் கைது செய்ய வந்திருப்பதாகவே எல்லோரும் கருதி, தயாராக இருந்தனர்.

அன்று மாலையும் இராயப்பேட்டையிலே, 'போலீஸ் ராஜ்யம்' நடந்தது—பேட்டை முழுவதும் அவர்களின் பட்டாளம்! பெரு வீதிகளில் மூன்றடிக்கு ஒரு போலீஸ், பத்தடிக்கு ஒரு பாதுகாப்பு அதிகாரி, இருபதடிக்குள் ஒரு பட்டாள மேலதிகாரி! சந்து பொந்துகளிலெல்லாம் அவர்கள்!

பேட்டை ட்ராம்வே லைனில் மக்கள் நடந்து செல்லவே அனுமதிக்கப்படவில்லை. போகிறவர்களை அதட்டியும், மிரட்டியும் ஆர்ப்பாட்டம் செய்தவண்ணமிருந்தனர். பெரிய லாரிகளிலே அவர்கள் ஏறிக்கொண்டு, வீதிகளை வான வெளியென்று நினைத்துக்கொண்டு பறந்தனர்—விரைந்தனர்—பக்கங்களில் செல்பவர்கள்மீது திடீரெனப் பாய்ந்தனர்—தாக்கினர்! கூட்டமாகச் சேர்ந்திருக்கிற மக்களைத் தடியடியால் கலைத்தனர்.

இரத்த வெறியெடுத்த சிறுத்தைகளாக அவர்கள் உலவினர்.

மூன்று நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த போலீஸ் படையினர்—சர்க்காரின் சங்கடங்களை சமயத்தில் தீர்த்துவைக்க ஏவிவிடப்படும் 'மூலபல சேனை'யெனும் ரிசர்வ் போலீஸ், கவசக் குல்லாய் அணிந்த விசேஷ சேனை, மலபார் பட்டாளம்—இவை போதாமல் யுத்தத்திற்குப் பயன்படும் காலாட்படை, குதிரைப் படை! வெட்கம்! வேதனை நம் விலாவைக் குத்திடுகிறது—துக்கம் நம் தொண்டையை அடைக்கிறது. சாந்த சொரூபி காந்தியின் பக்தர்கள் நாட்டின் காவலர்களாக இருக்கும்பொழுது, இந்த ஆட்சி நடக்கிறதே என்று நினைத்துக்கொண்டால் நம் இதயமே அசைவற்று நிற்கிறது!

மாலை 3 மணியிலிருந்தே 'அகிம்சா ஆட்சி' ஆரம்பமாயிற்று. வழியிலே செல்கிற மக்களைகளை விரட்டியடித்தனர். இரண்டொருவர் சேர்ந்து சென்றால், கலைந்து போகும்படி கட்டளையிட்டும், ஏதேனும் பேசிக்கொண்டு சென்றால் மிரட்டியும், 'ஏக ரகளை' செய்தனர்.

ஐயோ, 'அஹிம்சை' என்ற வார்த்தையே இந்தக் காட்சியைக் கண்டால் வெட்கப்படும்—அவ்வளவு கோரக் காட்சி! மக்கள் வழிநடைப் பாதையில் செல்வர். 'ஜீப்களில் 'ஆட்சி அம்புகள்' ஏறிக்கொண்டு வருவா. திடீரென்று குதிப்பர். யார் கையில் கிடைக்கிறார்களோ அவர்களை எல்லாம் மூர்ச்சையடைந்து கீழே விழும் வரை அடித்து சாய்த்துவிட்டுப் போவர்!

காலையிலே, 'காங்கிரஸ்' அளித்த பரிசில்களுக்குப்பத்து போட்டுக்கொள்ளவும் நேரமின்றி [illegible] மனமின்றி, திராவிட முன்னேற்றக்கழக தொண்டர் மணிகள் பேட்டை நோக்கி கூட்டம் கூட்டமாக வந்து கொண்டே இருந்தனர்.

ட்ராம்களில் நிற்கவும் இடமில்லை—ஆமை போல் நகர்ந்து வந்தன! அவைகளில் ஏராளமான தொண்டர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்றுவிட எண்ணி ஏறிவந்தனர். வாடகைக் கார்களில் சிலர், ரிக்ஷாக்களில் பலர்—இப்படி வகை வகையான வாகனங்கள்மூலம் பேட்டைக்குவந்துகொண்டிருந்தனர். ஆனால் பேட்டையோ ஒரு உபகண்டத்து மக்களின உள்ளப்போக்கையுணர்ந்துகாரியமாற்றும் 'கனம்' வருகிறார் என்ற நிலையிலில்லை—ஏதோ எதிரிகள் கையிலே சிக்கியதுபோல இருந்தது! அன்பர் ஆச்சாரியாரே, ஆச்சர்யப்பட்டிருப்பார், மூக்கின்மீது விரலைவைத்திருப்பார், தாம் வந்த வழியிலே ஒரு மனித உருவத்தையும் பார்க்க முடியவில்லையே, எங்கும் போலீஸ்தானே இருக்கிறார்கள் என்று! ஆம் அப்படி வேட்டையாடினார்கள், திடீரென சோதனை செய்து, தொண்டர்கள் கருப்புத் துணிகள் வைத்திருந்தால் அவர்களை அடித்துத் துன்புறுத்தி, அருகிலுள்ள போலீஸ் நிலையங்களில் காவலில் வைத்தனர்.

அவர்கள் எவ்வளவு கொடுமையாக மக்களைச் சிதறடித்தனரோ, அதைவிடப் பன்மடங்கு அதிகமான தீவிரத்தோடு, உற்சாகத்தோடு, இயக்க முன்னணி வீரர்கள் தொண்டர் தோழர்களையெல்லாம் ஒரு இடத்தில் கூட்டி கருப்புக் கொடி காட்டிடச் செய்தல் வேண்டும் என்ற முயற்சியிலீடுபட்டனர்.

கார்களையும், வண்டிகளையும்கூட 'அவர்கள்' அனுமதிக்கவில்லை. எனினும் வாடகைக்கார்களிலே ஏறிச் சென்று நல்ல இடங்களிலெல்லாம் மக்களைத் திரட்டலாம் என்று எண்ணிக்கொண்டு சென்ற தோழர்களை தடுத்து நிறுத்தி, அருகில் உள்ள போலீஸ் நிலையங்களில் கொண்டு சென்று காவலில் வைத்தனர். தோழர்கள் என்-வி-நடராசன், குறிஞ்சிப்பாடி சாம்பசிவம், அகரம் டி-வி-சாமி, கார்ப்பரேஷன் கவுன்சிலர் முனுசாமி வந்த காரை மடக்கிக் கொண்டனர் சிறிது நேரத்திற்குப்பின்னால் தோழர்கள் ஈழத்து அடிகள், தில்லை-வில்லாளன், காஞ்சி சுந்தரேசன், வந்த காரையும் நிறுத்தி விட்டனர் இதுபோலவே கார்களில் வந்துகொண்டிருந்த தோழர்கள் கே-கே-நீலமேகம், ஈ-வே-கி-சம்பத், காஞ்சி கவுன்சிலர் சி-வி-இராசகோபால், போளூர் சுப்பிரமணியம், கே-கோவிந்தசாமி, முல்லைக்கொம்பை — வடிவேலு, ஜலகண்டாபுரம் ப. கண்ணன், நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி ஆகியோரையும் கைது செய்தனர். இராயப்பேட்டை,மைலாப்பூர்போலீஸ் நிலையங்கள் நம் முன்னணி வீரர்கள் தங்கும் கூடாரங்களாகி விட்டன.

இன்னும் ஏராளமான தோழர்களையெல்லாம் கொண்டுவந்து அடைத்துக்கொண்டேயிருந்தனர்.

'பொறுப்பில்லாத' மந்திரியார் ஆச்சாரியார் வந்துபோன பிறகும் ஒருமணி நேரம் வரை மக்கள் நடமாடவும் முடியவில்லை. போலீசார் அவ்வளவு கொடுமையாக நடந்துகொண்டனர்.

இரவு எட்டு மணிக்கு காவலில் வைக்கப்பட்டிருந்த தோழர்களுக்கெல்லாம், ஜாமீனில் வெளியில் போவதானால் போகலாம் என்று அறிவிக்கப்பட்டும், அவர்கள் வெளியில் போக மறுத்துவிட்டனர்.

தோழர்கள் மிகவும் மகிழ்ச்சியுடனேயே, காவலில் இருந்தனர். இராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் நடந்த நிகழ்ச்சிகளையும், மைலாப்பூர் நிலயத்தில் நிகழ்ந்த நடவடிக்கைகளையும் சேர்த்துப் பார்த்தால் சிரிப்பும் வரும் — சிந்தனையும் தீவிரமாக வேலை செய்யும்!

'அழைத்துவந்தது நீங்கள் நாங்கள்போகவேண்டியஇடம் [illegible], ஆகவே, சப்இன்ஸ்பெக்டர்தான் டாக்ஸிக் [illegible]ணம் தரவேண்டும்" என்று அடிகள் சொன்னபொழுது அங்கிருந்தோர் சிரித்துவிட்டனர். சாதிப் பெயரைக் கேட்டபொழுது ஒரு தோழர் சொன்ன பதிலைக் கேட்டால் இன்னமும் நமக்கு களிப்பு வரும். "நீ என்ன சாதி?" கேள்வி இது. 'நான் திராவிடன்!" கணீரென ஒலிக்கும் குரலில் பதில்! இன்னொரு சிறுவன், கூறிய விடை, காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தை, கூரிய ஈட்டியெனக் குத்தியே இருக்கும். "நீ ஏன் கருப்புக்கொடி பிடிக்க வந்தாய்?" போலீசாரின் கேள்வி. கொடுமையையும் வறுமையையும் ஒழிக்கவே!" என்றான், அழுத்தந் திருத்தமாக, ஆத்திரங் கலந்த குரலில்! தோழர்களை மைலாப்பூர் நிலயத்திற்கு அழைத்துச் செல்லும்பொழுதே, "ஐயோ, இங்கும் இடமில்லையே!" என்று துயரக் குரல் கொடுத்தார் ஒரு போலீஸ் அதிகாரி, நகைப்புச் சித்திரம்! அகிம்சா வீரர்களின் அடக்கு முறைகளுக்கு ஆளாக்கப்பட்டும், தோழர்கள் துவளாத உள்ளத்தோடு, சோகம் கப்பாத முகத்தோடு, சிரிப்போடும், விளையாட்டுப் பேச்சுகளோடும், கொடுமையைத் தாங்கிக்கொண்டனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

1-ம் பக்கத் தொடர்ச்சி

பெருமைபேசி, ஆட்சியிலமர்ந்திருப்போர் மரக் கட்டைகளல்ல—மனிதர்கள்தான் 'மனிதன்' என் பதன், பொருள், உணர்ந்தவர்கள்தான். மானிட ஜன்மத்தின் பெருமையுணர்ந்தவர்கள்தான். உயிருக்குள்ள மதிப்பு அவர்களுக்கும் தெரியும்!

ஏழைகளின் கண்ணீர், பெண்களின் பெருமூச்சு, குழந்தைகளின் 'குய்யோ, முறையோ' என்ற கூக்குரல் கேட்டுச் சகித்துக்கிடக்க அவர்கள் 'ஹிட்லர்'களல்ல! இதயமில்லாதவர்களல்ல—'எது'வும் இல்லாதவர்களல்ல! இருந்தாலும் சென்னையிலே 'பஞ்சாபை'க் காட்டினார்கள்! 'ஜாலியன் வாலாபாக்'கைச்செய்து காட்டினார்கள்! 'வெலிங்டன் ராஜ்யத்தை' நடத்திக் காட்டினார்கள்!

# 'பாலைவனத்தில்'

இந்த நாடும்—இங்கு வாழும் மக்களும் இன்று ஆட்சியிலமர்ந்திருப்போருக்கு அன்னியரல்ல. ஆள்வோரும் ஆளப்படுவோரும் ஒரே நாட்டினர்! ஒரே இரத்தமுடையவர்கள்!! இருவரும் ஓடித் திரிந்ததும், பாடியுலாவியதும், படித்துத் தேர்ந்ததும், பார்த்துப் பேசியதும் இதே நாட்டில்தான்.

நாடு பொதுவானது — இன்று ஆட்சியிலமர்ந்திருப்போரின் ஏகபோகச் சொத்து அல்ல. இன்று அவர்கள் அனுபவிக்கும் அதிகாரமும், மந்திரி பதவியும், மாதா மாதச் சம்பளமும் நிரந்தரமானவையல்ல; நீடித்த ராஜாக்களுமல்ல! சாதாரணமானவர்கள்தான், மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த மனிதர்கள்தான்—நாளை பரந்து விரிந்து கிடக்கும் திராவிடத்தில், கவனிப்பாரற்றுத் தரியப்போகும் 'அவிஞ'கள்தான். இன்று மந்திரிகள்—நாளை மனித சமுதாயத்திலே உலவப்போபவர்கள்!

இன்று கைகட்டி, வாய் பொத்தி நிற்கும் அதிகாரிகளை ஆட்டி வைப்பவர்கள்—நாளை அதே அதிகாரிகளைக் கண்டு அஞ்சப்போபவர்கள்!

ஆனாலும், அதையெல்லாம் மறந்துவிட்டார்கள், மனித சமுதாயம் சகிக்காத செயல்களை செய்துவிட்டார்கள். 'அந்தஸ்து' என்ற போலித் திரைக்கு, மக்கள் 'இரத்தம்' என்ற வர்ணத்தை எடுத்துப் பூசிவிட்டார்கள். ஆட்சி அதிகாரம் கையிலிருக்கிறது என்ற கர்வத்தால் 'அதிகாரிகள்' என்ற அம்புகள்மூலம், 'மக்களை மதியா மதோன்மத்தர்கள்' என்னும் மறையாத மாசைத் தேடிக்கொண்டார்கள்!

24-10-50 அன்று சென்னையிலே நடைபெற்ற காட்சிகளை, காந்தியார் இருந்து கண்டிருந்தால் இரத்தக் கண்ணீர் சிந்துவார்.

ஜாரின் ஆட்சியோ, லூயியின் தர்பாரோ, வெள்ளையன் காலத்திலோ — என்றால் 'சகஜம்' என்று சொல்லிவிடலாம். ஆனால், 'நம்மவர்கள்' ஆட்சியிலே நடைபெற்றது. நமது இனத்தவர்கள் அரசாட்சியிலே நடைபெற்றது. 'சகோதர சகோதரிகளே!' என்று அன்போடு அழைத்து, 'சுதந்திரம் பெற வாரீர்' என்று கூவிப் பேசிய—நமது சகோதரர்களின் சர்க்காரிலே நடைபெற்றது!

கொடுமை செய்வோர் தண்டிக்கப்படத்தான் வேண்டும். பாம்பும் புலியும் சீறினால் அடக்காமல் விடுவது கூடாது. திருடர்களையும், வஞ்சகர்களையும், கொலைகாரர்களையும். நாட்டில் நடமாடவிடுவது நல்லதல்ல. இத்தகைய சமுதாயக் கேடர்களை அடக்கவே சட்டம் பாயும்! சட்டத்தின் காவலர்களான 'அதிகாரிகளுக்கும்' வேலையிருக்கும்! அவர்கள் துப்பாக்கிகளும் தடியடிகளும் ஓயாது வேலை செய்யும்!

ஆனால், 24—10—50 காலையிலும், மாலையிலும் கூடியவர்கள் — சாதாரணமானவர்களல்ல. சமுதாயச் சிற்பிகள்! வீண் வேலையில் ஈடுபடுவோரல்ல—ஒரு நாட்டின் விடுதலைப் பட்டாளம்! சுகமாக வாழ வசதியிருந்தும் அவைகளைத் தூர உதறிவிட்டு, சொந்த நாட்டின் நல்வாழ்வுக்குப் பாடுபடுபவர்கள்! படித்தவர்கள்—பட்டம் பெற்றவர்கள்—மக்கள் மன்றத்தின் மணிவிளக்குகள்!

அவர்கள் தாக்கப்பட்டனர், கண்மூடித்தனமாகக் காங்கிரஸ் ஆட்சியில் நடத்தப்பட்டனர்.

இந்தக் கொடுமைகள் நாட்டியமாடுவதற்கு —அவர்கள் செய்த குற்றமெல்லாம், கருப்புக் கொடி காட்ட வந்ததுதான்!

கருப்புக்கொடி பிடிப்பது உலகிலுள்ள ஜனநாயக நாடுகளிலெல்லாம் அங்கீகரிக்கப்பட்ட முறை. மந்திரிமார் ஆட்சியிலே மக்களுக்கு அதிருப்தி யேற்பட்டால் அதைத் தெரிவிப்பதற்குள்ள வழி. இந்திய நாட்டின் சட்டத்திற்கு புறம்பானது அல்ல—கருப்புக் கொடி பிடிப்பது.

இருந்தும், தங்கள் அதிருப்தியை டில்லி மந்திரிக்குக் காட்டவந்த மக்களை அடித்தனர்—ஆச்சாரியார் கண்ணில் கருப்புக் கொடிகள் காணாது தடுக்க ஆச்சாரியார் 'விஜயம்' செய்யும் இடத்தைச் சுற்றி ஒரு மைல் வரை—மனித சஞ்சாரமில்லாத 'பாலைவனம்' போல ஆக்கினர்! பாலைவனத்திலே பவனி வந்தார், ஆச்சாரியார்!!

சென்னையின் வீதிகளில் எப்போதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும்—பறக்கும் கார்கள், விர்ரென்று நிமிடத்துக்கொருமுறை தொடர்ந்து செல்லும் பஸ்கள், மோட்டார் சைகிள்கள் எல்லாம் ஓயாமல் சந்தடியாகவே இருக்கும். அத்தகைய பரபரப்பு நிறைந்த வீதிகள், ஆச்சாரியார் வருகையின்போது 'பாலைவனம்' ஆகிக்கிடந்தன! இதற்கு, தேவைப்பட்ட அதிகாரிகள், ஆயுதம் தாங்கிய படையினர், கொஞ்சமா? நூறு, ஐம்பதா? இல்லை! ஆயிரக் கணக்கு!! இராயப்பேட்டையிலும், கோட்டை வெளியிலும் குழுமிக் கிடந்த போலீஸ் லாரிகள் ஏராளம்!

நடப்பது காங்கிரஸ் ஆட்சி—ஆட்சி நடக்க வரி கொடுப்பது மக்கள். மக்களைத் தாக்க அவர்கள் வரிப் பணத்தில் செலவு!!

காங்கிரஸ் ஆட்சியின் தடியடிக் காட்சியைப் பற்றி சுதேசமித்திரன் 'கோரில்லா முறை' என்று சித்தரித்திருக்கிறது. 'மெயில்' இதழ், போலீசாரின் ஆர்ப்பாட்டத்தைப் படம் பிடித்துப் போட்டிருக்கிறது!

பெண்களைத் தாக்கி விரட்டிய காட்சியும், வந்தோர் போவோரையெல்லாம் மிரட்டிவோட்டிய நிகழ்ச்சியும் நினைத்தால் நெஞ்சு கலங்கும்!

அறிஞர் கா. அப்பாதுரை—ஒரு பன்மொழிப் புலவர், M. A., L. T. பட்டம் பெற்றவர். தமிழுலகம் பாராட்டும் கூர்த்த மதியினர். சிறந்த எழுத்தாளர். சிந்தனைச் சிற்பி. எல்லாவற்றிற்கும் மேலாக சாந்த சொரூபி! சமீபகாலம்வரை அரசாங்கத்தில் பொறுப்புள்ள பதவி வகித்து—போக்கு பிடிக்காததால் உதறிவிட்டு வெளியேறியவர்! அவர், அடிக்கப்பட்டார்! தார் ரோடில் புரண்டு விழும்படிச் செய்யப்பட்டார்! மலை குலைந்தாலும் மனங் குலையா அம்மாவீரர், தடியடியின் வேதனை தாங்காது, கண்களில் நீரை விட்ட காட்சி—ஐயகோ, நினைத்தாலே இதயம் துடிக்கிறது! அவரை மட்டுமல்ல, அவர்கூட வந்த

# பவனி வந்தார்

அவரது மனைவியார், திராவிடப் பெண்களின் வீரக் குரல், விடுதலை வேகங்கொண்ட வீராங்கனை தோழியர் அலமேலு அம்மையாரும் தாக்கப்பட்டார்! அவர்கள் இருவர்—இருவரையும் தாக்கியோர் பலர்!!

தோழியர் செல்லக்கண்ணு அம்மையாரை' சுருண்டு விழுந்தபோதும் விடவில்லை! அடித்தனர்!! பெண்கள் படையின் பெருந்தலைவி அவர்! எதற்கும் மனங்குலையா தமிழின் சின்னம்! வீரப் பரம்பரையின் விடிவெள்ளி! அவரைத் தாக்கினர்—சேலைதடுக்க, வேகமாக நடக்கமுடியாது தவிக்க, திகைத்து அம்மையார் நிற்பதைக்கண்டும் சளைக்கவில்லை! அவர் பெண்—ஆனாலும் விடவில்லை! வேகமாக ஓட அவரால் முடியாது—ஆனாலும் விடவில்லை! பெரிய அதிகாரிகள்—எதிரே நின்று அம்மையார் படும் அவதியைப் பார்த்துக் கொண்டேயிருந்தனர் — ஆனாலும் விடவில்லை! அடித்தனர்—தாங்காது, தார்ரோட்டில் விழுந்தார்! "எழுந்திருக்க முடியவில்லை!" என்று, வேதனையோடு முனகினார்—விடவில்லை! 'எழுந்திரு! எழுந்திரு!!' என்று கூறிக்கொண்டே, காங்கிரஸ் ஆட்சியின் அதிகார அம்புகள் கூத்தவத்தாண்டவமாடினர்!

அவர் பெண்—பெண்கள் என்றால் பேயும் இரங்குமாம்! ஆனால் காங்கிரசாட்சி இரங்கவில்லை—கைமுறிய, கால் வீங்க, உடம்பெல்லாம் காயங்கள் ஏற்பட அடித்துப் போட்டனர்!

படுகாயம் பட்டோரின் பட்டியலை விவரிக்க முடியாது. நகரத் தந்தைகளில் ஒருவர் சென்னை நகர மக்களின் பிரதிநிதி, எல்லோரும் போற்றும் பெரும் பணிபுரிந்துகொண்டிருப்பவர், கார்ப்பரேஷன் கவுன்சிலர் தோழர் முனுசாமி தாக்கப்பட்டார்! அவர் மட்டுமா? காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தோழர் சி. வீ. இராசகோபால், சுமார் இருபது ஆண்டுகளாக, காஞ்சிமா நகரின் கவுன்சிலராக இருந்து வருபவர்! அவரும் தாக்குண்டார், உடம்பெல்லாம் கனிந்த பழம் போலாயிற்று!

இவ்வளவு கோலாகலம் அன்று நடைபெற்றது. காரணம் ஒரு பெரியபுரட்சி ஏற்படவிருந்து அதை தடுப்பதற்காக அல்ல, அவ்வளவு அமர்க்களம் நடைபெற்றதும்,

கருப்புக்கொடி காட்ட வந்தனர்! என்பதற்காக!

அதற்கு, இவ்வளவு தர்பார்! இவ்வளவு கொடுங்கோன்மை!!

24-10-50 காலை ஐந்துமணியிலிருந்தே, சென்னை கோட்டை நோக்கி திரள் திரளாக மக்கள் திரண்டுவந்துகொண்டிருந்தனர். கோட்டைக்குள் செல்ல பலவழிகள் இருக்கும் காரணத்தால், ஆங்காங்கெல்லாம் மக்கள் கருப்புக்கொடியோடு கூடினர். அமைதியாக, வரிசையாக, அவர்களாகவே காலை 7-மணிக்குள் அணிவகுத்து நின்றனர். ஒழுங்கும், அமைதியும் அங்கே நிலவிக்கிடந்தது. இந்நிலையில் திடீரென விசேஷ ஆயுதப்படைகள் லாரிகளில் வந்தனர்! சென்னைமாகாண உயர்தரப்போலீஸ் அதிகாரிகளும் வந்தனர். வந்ததும் தாக்கினர்! கண்மண் தெரியாது விழுந்தடித்து விரட்டினர்! விரட்ட விரட்ட ஒவ்வொரு மூலைகளிலும் மக்கள் தொகை அதிகமாகிக்கொண்டே இருந்தது!

## ரயில்வே நிலையத்தில்!

கோட்டை இரயில்வே நிலையம்-மின்சார இரயில்கள் வந்து நிற்கும் இடமாகும். அங்கு இறங்கி, மேல்பாலம் ஏறிச்சென்றால் சர்க்கார் காரியாலயங்களிருக்கும் கோட்டைக்குப் போகலாம். கோட்டையில், சென்னைசர்க்காரின் மாகாண நிர்வாக இலாக்காக்களும், சட்டசபையும் மந்திரிமார் அலுவலகங்களும் இருப்பதால் தினசரி ஆயிரக்கணக்கானோர் கோட்டை ஸ்டேஷனில் இறங்கிச் செல்லுவர். நகரின் பல்வேறு மூலைகளிலிருந்து ஆபீசுக்குச் செல்லும் அதிகாரிகள், குமாஸ்தாக்கள், முதலியோர் வந்து இறங்குவதும் அங்குதான். சென்னை கடைத்தெரு நிரம்பிய பகுதிகளுக்கு வருவோரும் அங்குதான் இறங்கவேண்டும். ஆகவே எப்போதும், கோட்டை ஸ்டேஷன், கும்பல் நிரம்பியதாகவே இருக்கும். அன்று, அங்கு ஏராளமான போலீசார் அணிவகுத்து நிறுத்தப்பட்டிருந்தனர்! அவர்கள் ரயிலில் இறங்கியோரையெல்லாம் சோதனை போட்டனர்! கடைக்குப் போகவும் ஆபீசுகளுக்குச் செல்லவும் ஸ்டேஷனிலிருந்து இறங்கி ரோடுக்கு வந்ததும் பிரயாணிகளையெல்லாம் அடித்து விரட்டினர்! ஆபீசுகளுக்குச் செல்ல வந்த அவர்கள் எல்லோரும் அலமந்து ஓடிய அலங்கோலம் பரிதாபமாயிருந்தது. ரயிலிலிருந்து இறங்கிய மாணவர்கள், பெண்மணிகள், பழக்கூடை தாங்கிவந்த மூதாட்டிகள், கடைக்கு வந்த வேலைக்காரர்கள், பத்திரிகை விற்கும் சிறுவர்கள், பத்திரிகை நிருபர்கள் எல்லோரும் தடியடி தர்பாருக்கு ஆளாகினர்!

மணி 8½-க்கு சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி, காஞ்சி. மணிமொழியார், டி. எம். பார்த்தசாரதி முதலானோர் அதிகாரிகளைச் சந்தித்து 'இந்த அக்கிரமம் ஏன்?' என்று கேட்கச் சென்றபொழுது, அவர்கள் யாவரையும் போலீஸ் லாரியில் ஏற்றிக் கொண்டுபோய் ஒரு மைலுக்கு அப்பால் கொண்டுபோய் விட்டனர்.

## வெளியூர் பஸ் நிலையத்தில்

சம்பவம் நடைபெற்ற இடத்தைச் சுற்றிலும் பல மைதானங்கள் முள்வேலியால் அடைக்கப்பட்டிருப்பவையாகும். அந்த மைதானத்துக்குள், மணி 9-க்கெல்லாம் மக்கள் பெருந்திரளாகக் கூட ஆரம்பித்தனர். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கருகில், சென்னையிலிருந்து நான்கு திசைகளிலும் வெளியூர்களுக்குப் பிரயாணிகள் செல்லும் பஸ் நிலையம் இருக்கிறது. அங்கு எப்போதும் சுமார் 40, 50 பஸ்கள் நின்றவண்ணமே யிருக்கும். அதற்குப் பக்கத்தில் பிரசித்திபெற்ற பழ மார்க்கெட் இருக்கிறது. அதைத் தாண்டினால் சைனா பஜார் ரோடு.

சைனா பஜார் ரோடு வரையில் கூட்டம் நிறைந்துகிடந்தது. அதுவரை, ஓடிவந்து தாக்கி

# ஆச்சாரியார்!

னர். பஸ் நிலையத்தில் புகுந்து அங்கு வெளியூர்களுக்குச் செல்ல நின்றுகொண்டிருந்தோரையெல்லாம் அடித்து நொறுக்கினர்! பஸ்களில் உட்கார்ந்திருந்தோரை யெல்லாம் இழுத்துப்போட்டு அடித்தனர்! பஸ் நிலையத்தில் இருந்த டீ கடைகள் உருண்டன! சிற்றுண்டிக் கடைகள் சின்னாபின்னமாயின! ஷர்பத் ஸ்டால்கள் உருண்டு எல்லாம் உடைந்து சிதறின! மூதாட்டிகள் அலற, குழந்தைகள் கதற, பெண்கள் கூக்குரலிட, தர்பார் சிறிதுகூட நிற்காது அமைதியாகவே, விட்டுவிட்டு, ஐந்து முறை நடைபெற்றது. பஸ்காரர்களெல்லாம் கலங்கிப்போயினர்! "இதுபோன்ற மோசமான நடவடிக்கை எப்போதும் நடந்ததில்லையப்பா!" என்று, கும்பலைப்பார்த்தோரே, ஆச்சாரியார் போக்கு குறித்துக் கூறினர்!

(4-ம் பக்கம் பார்க்க)

# நாடெங்கும் நமது பணி

ஓராண்டில் திராவிட முன்னேற்றக்கழகத் தோழர்கள் செய்த அரும்பணிகளை வகைவகையாகத் தொகுத்துத் தந்து வருகிறோம். சமூக நீதிக்காக நடத்திவரும் போர் பற்றியும், ஓராண்டு முடிவில் 'திராவிடநாடு நாள்' கொண்டாடியது குறித்தும், பொதுச் செயலாளரை இப்பொல்லாத அரசாங்கம் சிறைப்படுத்திய பொழுதும், பிறகு விடுதலை செய்த பொழுதும் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் தந்து வந்துள்ளோம்.

இந்தத் தொகுப்பில் தி. மு. க. ஆண்டு இறுதியில் செய்த சிலபல நிகழ்ச்சிகளின் பின்னலைக் காணலாம்.

கோவை:- 7—9—50-ல் நகரத்தின் பல பகுதிகளிலுமுள்ள கழக நிர்வாகிகள் பி. பாலச்சந்திரன் தலைமையில் கூடி, கோவில்பட்டித் தீர்மானங்களைப் பற்றிய விவாதம் நடந்து, அம்மாநாட்டுத் தீர்மானங்களை அங்கீகரித்தும், அதனை கோவையில் நடைமுறைப்படுத்த ஒரு போராட்டக் குழு அமைத்து அதில் எல்லைக் கிளைக்கழகச் செயலாளர்களையும், மாகாண கழக உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்வதென முடிவு செய்து ஒன்பதுபேர் கொண்ட போராட்டக் குழு நியமித்து, எஸ். ஏ. இராசமாணிக்கத்தை அதன் செயலாளராக்குவதெனவும் முடிவுகள் செய்யப் பட்டன.

கொழும்பு:- 10—9—50-ல் மா. இளஞ்செழியன் தலைமையில் தி. மு. க. செயற்குழுவினரும், முக்கியமானவர்களும் கூடி, 'முன்னேற்றம்' என்ற மாதமிருமுறை பத்திரிகை நடத்த பத்து பேர்கொண்ட கமிட்டி தீர்மானிக்கப்பட்டது.

ஆம்பூர்:- 10—9—50-ல் கூடிய தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் இவ்வாண்டு செயற்குழுவினர் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:- க. சண்முகம், துணைச்செயலாளர்:- மு. குப்பன், பொருள் உறுப்பினர்:- மு. கண்ணன், விளம்பர உறுப்பினர்:- மு. பலராமன் அடுத்த திங்களில் பொதுக்கூட்டமும், சீர்திருத்த நாடகமும் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

கோவை:- 10—9—50-ல் ப. கு. திருமூர்த்தி தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கே. என். செழியன், சி. டி. தண்டபாணி, அ. ச. இளங்கோ, ஆறுமுகம், பி. என். இராமானுசம், எஸ். ஏ. இராசமாணிக்கம் ஆகியோர் கோவில்பட்டித் தீர்மானங்களை விளக்கிப் பேசினர். அன்று போராட்டக் குழு உண்டியலுக்குச் சேர்ந்த தொகை ரூ. 17—4—0.

பணகுடி:- 10—9—5-ல் எஸ். வன்னியப் பெருமாள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் எம். எஸ். சிவசாமி பேசினர்.

மண்டலமாணிக்கம்:- 15—9—50-ல் அருப்புக்கோட்டை சிவ. சண்முகசுந்தரன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், க. நடராசன் இன்னிசைபாட, எம். எஸ். இராமசாமி பேசினர். எா். சுப்பிரமணியன் நன்றி கூறினர்.

வேலகத்தம்:- 18—9—50-ல் கோ. பழனியப்பன் தலைமையில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில், செயற்குழுவில் மாறுதல்கள் ஏற்படவேண்டியிருந்ததால் அதற்கான மாற்றங்களைச் செய்தும், மற்றும் பன்னிரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

கடம்பூர்:- 19—9—50-ல் வே. மு. மாரியப்பா தலைமையில் கூடி புதிய நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்:- மா. க. செல்லையா, துணைச்செயலாளர்:- பெ. வேலு, பொருள் உறுப்பினர்:- சு. தர்மராஜ், விளம்பர உறுப்பினர்: வே. மு. சின்னமணி, துணை வி. உறுப்பினர்:- அ. இரத்தினசாமி, நிர்வாக உறுப்பினர்:- மு. பேச்சியப்பன், ப. தில்லை, ஆர். ஜே. பாண்டியன், அ. மாரியப்பா, மு செல்லம், சி. மு. அப்பாசாமி, மு. அருணசலம், செ. மாரியப்பா, ஆ. தங்கவேல், குருசாமி, இரத்தினசாமி.

ஆலமரத்துப்பட்டி:- 19—9—50-ல் நடந்த செற்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர்மீது அடக்குமுறை வீசிய ஆளவந்தாரைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புஞ்சைத்தலையூர்:- 18—9—50-ல் கே. எஸ். காச்சிமுத்து தலைமையில் நடந்த கூட்டத்தில் 24—9—50-ல் திராவிடநாடு நாள் கொண்டாடுவதெனவும், கம்யூனல் ஜி. ஓ. வை ஆதரித்தும், ரேஷன் முறைக்கோளாறைக் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காவேரிப்பாக்கம்:— 19—9—50ல் ஏ. எல். சி. கிருட்டினசாமி தலைமையில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளரையும், சி. பி. சிற்றரசு ஆகியோரை அழைக்கத் தீர்மானிக்கப்பட்டது. செயலாளராகப் பணியாற்றிய இராதாகிருட்டினனின் இராஜினாமா ஒப்புக்கொள்ளப்பட்டு, தற்காலிக செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டது. செயலாளர்:- மு. கண்ணப்பன், துணைச் செயலாளர்:- பி. சம்பந்தராசன், நிதி உறுப்பினர்:- மு. ரங்கநாதன் விளம்பர உறுப்பினர்:- கே. கந்தசாமி, மற்றும் ஏழு செயற்குழுவினர் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்:- 21—9—50ல் மம்சாபுரம் முத்துச்சாமி தலைமையில் நடந்த ஓராண்டு நிறைவு விழாப் பொதுக் கூட்டத்தில் எஸ். இராமதாஸ், எம். எஸ். இராமசாமி பேசினர்.

திருச்செங்கோடு:— 22—9—50ல் கண்டன ஊர்வலமும், டி. ஜி. கணபதி தலைமையில் பொதுக்கூட்டமும், அதில் அ. நடேசன், டி. ஏ. அய்யாவு, டி. எஸ். அப்பிலு, என். பி. சதாசிவம், என். கே. பி. வேல் சொற்பொழிவுகளும் நடந்தன.

இலங்கை:- 23—9—50ல் லீலாவதி பாடிய பின்னர், மா. யோ. தேவராசன், வரவேற்புரை நிகழ்த்தினர். எஸ். கே. சுந்தரராசன் தலைமை வகித்து நடத்திய 'திராவிட நாடு நாள்' விழாவிலே, எம். கே. அன்பழகன், தெ. இளங்கோவன், ஏ. இளஞ்செழியன், தேவராசன் பேசினர்.

அறந்தாங்கி:- 23—9—50ல் 'திராவிட நாடு நாள்' விழாவிலே சுப. சதாசிவம், இராம—பழனிச்சாமி, டி. கே. சீனுவாசன் கலந்துகொண்டனர்.

கோலார் தங்கவயல்:- 24—9—50ல் கே. எஸ். அன்வார் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில், இராபர்ட் வில்லியம், கே. ஜி. பூபாலன் பண் பாடினர். இன்பதாசன் வரவேற்க, கே. எஸ். கோபால் துவக்க உரை நிகழ்த்த, கே. ஜி. சின்னராசன், அன்புதாசன் ஆகியோர் ஆதரித்துப் பேச, கூட்டம் துவங்கியது. க. அன்பழகன் எம். ஏ. பேசினர்.

நெல்லிக்குப்பம்:- 29—9—50ல் சி. இளவழகன் தலைமையில் நடந்த 'திராவிட நாடு நாள்' கொண்டாட்டத்தில் கே. ஏ. மதியழகன் பி. ஏ. பேசினர்.

சங்காசி நல்லூர்:- 30-9-50ல் இரா. அரங்கசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் ஆர். கிருஷ்ணசாமி, பி. வணங்காமுடி ஆகியோர் அடக்குமுறையைக் கண்டித்துப் பேசினர். ஆட்சியாளர் தலைவர்களை விடுதலை செய்தமைக்கு மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

திசையன்விளை:— 1—10—50ல் திருவடிமுத்து தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில், நாகர்கோவில் மனோகரன், வை. சுப்பிரமணியன், மதியழகன், ஆர். ரவீந்தரன் ஆகியோர் பேசினர்.

திண்டுக்கல்:— 1—10—50ல் இல. வீரராசன் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக் கூட்டத்தில் என். முத்து, நிலக்கோட்டை காத்தான், எம். பரமசிவம், எம். கே குப்தா பேசினர்.

திருக்குற்றாலம்:— 2—10—50ல் கே. சண்பகம் தலைமையில் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் புதிய நிர்வாகக்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:— கே. குருசாமி, நிதி உறுப்பினர்:- சீடாமுனி, விளம்பர உறுப்பினர்:- கே. எஸ். மாணிக்கம், மற்றைய உறுப்பினர்கள்:- பி. சொக்கலிங்கம், எஸ். பழனியப்பன், கே. சாமி, எஸ். கைலாசம், பி. செல்லப்பா.

பெருந்தோட்டம்:- 2-10-50ல் இரா. சண்முகம் தலைமையில் நடந்த தி. மு. க. திறப்புவிழாவில் மதிவாணர் கழகக் கொடியை ஏற்றுவித்தார். குடந்தை எஸ். கே. சாமி, இராசகோபால், கே. எஸ். சௌந்தர், மதிவாணன் பேசினர்.

சங்கரநயினர் கோவில்:— 2—10—50ல் இராசபாளையம், சேது இராமலிங்கம் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., பேசினர்.

இராசேந்திரன் தலைமையில் நடந்த தி. மு. க. செயற்குழுக்கூட்டத்தில் புதிய செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- டி. ஆர். சுப்பிரமணியம், துணைச் செயலாளர்கள்:— நாகசாமி, என். சங்கரன், பொருள் உறுப்பினர்:- க. இராசேந்திரன், விளம்பர உறுப்பினர்கள்:- சி. பால்வண்ணன், அ. பிரமுத்து. பிற உறுப்பினர்கள்:- ச. ப. நயினர், அ. சுப்பையா, லெ. சங்கர அப்பு, தி. திருவுடையான், தி. பி. பழனி, ம. ஆறுமுகம், மு. அருணசலம், ச. சுப்பிரமணியம், வை. கண்மாட்சி.

இராசபாளையம் வழியாக சங்கரநயினர் கோவில் வரும்பொழுது கரிவலம் வந்த நல்லூரில் நெடுஞ்செழியன், சேது இராமலிங்கம், டி. ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் வரவேற்கப் பட்டனர்.

குத்தாலம்:- 3—10—50ல் கூடிய தி. மு. க. செயற்குழு கூட்டத்தில், வெளியூருக்கு வேலை சம்பந்தமாக பி. எஸ். கணேசன் செல்வதால் சொ. வெங்கடேசனைச் செயலாளராகத் தெரிந்தெடுக்கப்பட்டது. புதிதாகச் செயற்முழுவும் அமைக்கப்பட்டது. செயலாளர்,- சொ. வெங்கடேசன், விளம்பர உறுப்பினர்:- ஆர். அப்பாசாமி, பொருள் உறுப்பினர்:- வி. நடேசன், அமைப்பாளர்:- என். சி. பன்னீர்செல்வம், மற்ற செயற்குழுவினர்:- சி. அருணசலம், என். மாரியப்பன், பி. சுந்தரமூர்த்தி, ஆறுமுகம், க. செயராமன், கோவிந்தராசன்,

செம்பனார் கோவில்:- 4-10-50ல் தி. மு. க. நிர்வாகக் குழுக் கூட்டம் சி. புருடோத்தமன் தலைமையில் நடந்தது. புதிய நிர்வாகக் குழு தெரிந்தெடுக்கப்பட்டது. செயலாளர் டி. பி. ஆறுமுகம், உதவிச் செயலாளர்:- சி. புருடோத்தமன், நிதி உறுப்பினர்:- எ. டி. எஸ். குப்புராமன், உதவி நிதி உறுப்பினர்:- என். சிதம்பரம், விளம்பர உறுப்பினர்:- எஸ். பி. கிருட்டினன், மற்றைய செயற் குழுவினர்;- பி. தருமலிங்கம், எஸ். பி. துரையரசன்! பி. பொன். அரங்கன், ஜி. தம்பித்துரை, ஜி. கலியபெருமாள், எஸ். இரத்தினம், டி. கே. இராமலிங்கம், செ. வெ. இராதாகிருட்டிணன், டி. மணி, வி. மணி.

சிந்தாமணி:- 6—10—50ல தி. மு. கழக உறுப்பினர் கூட்டத்தில் சி. பாலகிருட்டினன் என்பவருக்குப் பதிலாக அரங்கனுதனை விளம்பர உறுப்பினராகத் தெரிந்தெடுத்தனர். இப்போதைய செயற்குழு விவரம்: செயலாளர்:- சி. கோ. செயராமன், துணைச்செயலாளர்:- இரா. அரங்கநாதன், விளம்பர உறுப்பினர் இல. அரங்கநாதன், பொருள் உறுப்பினர்:- ச. இராமநாதன்.

சென்னை:- 7—10—50ல் கார்ன்ஸ்மித் நகர் மைதானத்தில் காஞ்சி. மணிமொழியார் தலைமையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன், சி. என். ஏ பேசினர்.

8—10—50ல் நுங்கம்பாக்கம் வள்ளுவர் கழகப் பொதுக்கூட்டம் பூ. கணேசன் எம். ஏ., தலைமையில் நடந்தது. நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, கே. ஏ. மதியழகன் பி. ஏ., சி. என். ஏ பேசினர்.

மேட்டுப்பாளையம்:- 7—10—50ல் துறையூர் ப. அழகமுத்து தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் மு. பெ. முத்துக்கருப்பன், டி. கே. சீனுவாசன் பேசினர்.

திருக்குற்றாலம்:- 7—10—50ல் கே. சண்பகம் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தின் பொழுது ஆ. திராவிடமணி கழகக் கொடியை ஏற்றிவைத்தார். சுந்தரம், சிடாமுனி பேசினர்.

கிருஷ்ணன் கோவில் -: 7—10—50ல் எஸ். பாபனாசம் தலைமையில் தி. மு. க. செயற்குழு தெரிந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:- வி. பாபனாசம், துணைச்செயலாளர்:- எஸ். பாவனாசம் பொருள உறுப்பினர்:- அந்தோணி, விளம்பர உறுப்பினர்:- எல். இராமச்சந்திரன், மற்றைய செயற்குழுவினர்:— என். குற்றாலிங்கம், அ. மணிமொழி, எஸ். இராசகோபால், எஸ். நடராசன், காம-சுப்பிரமணியன், துரைச்சாமி, கிருட்டினன்! சுடலைபாண்டி, ஏ. நாராயணன்—எஸ். நடராசன், என். குற்றாலலிங்கம் மாவட்டக் கழக உறுப்பினர்கள்.

செங்கோட்டை:- 17—9—50ல் நல்லூர் ஆ. திராவிடமணி தலைமையில், கழகப் புதுக்கட்டிடத்தில் 'திராவிட நாடு நாள்' கொண்டாடப்பட்டது. உலகநாதன், செண்பகம், திவான் பக்கீர், வடிவேல் சட்டநாதன் பேசினர்.

அன்று நடந்த அமைப்புக் கூட்டத்தில் புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்:— சட்டநாதன், துணைச் செயலாளர்:— செண்பகம், நிதி உறுப்பினர்:— உலகநாதன், விளம்பர உறுப்பினர்:- கந்தசாமி, செயற்குழுவினர்:— வடிவேல், முருகையா, அபூபக்கர், வள்ளிநாயகம், அருணசலம், குற்றாலிங்கம், முகையதீன், பிச்சை. நெல்லை மாவட்டக் கழக உறுப்பினர்கள்:- உலகநாதன், திவான் பக்கீர்.

மாநில

# திராவிட மாணவர் முன்னேற்றக் கழக

## ★ முதல் மாநாடு ★

சென்னை செயிண்ட்மேரி மண்டபத்தில்

8—11—50 புதன் காலை 8-மணிக்கு

தலைவர் — தோழர் **இரா. சத்தியேந்திரன்** பி. ஏ., பி. எல்.,

திறப்பாளர் — தோழர் **சி.என். அண்ணாதுரை** எம். ஏ.,

வரவேற்புக்குழுத் தலைவர்

தோழர் **கே. ஏ. மதியழகன்** பி. ஏ.,

பல அறிஞர் பெருமக்களும், மாகாண மெங்கணுமுள்ள கல்லூரி, உயர்நிலைப்பள்ளிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர்.

கட்டணம்:— வரவேற்புக்குழு ரூ. [illegible], பிரதிநிதி ரூ. 1, பார்வையாளர் அணா 8.

வி. கண்ணன், டி. பாண்டியன், கே. இராமமூர்த்தி,
மயிலை. பி. சீனுவாசன், பொருளாளர். டி. கே. பொன்வேலு,
(உயர்நிலைப்பள்ளிச் செயளாளர்கள்.) (கல்லூரிச் செயலாளர்கள்.)


## ஆசைத்தம்பி வழக்குநிதி

| | | | |
|---|---|---|---|
| முன்வரவு | ரூ 490 | 0 | 0 |
| சென்னை கே. கதிரவன் | 2 | 0 | 0 |
| புதூர் எம். கணபதி | 6 | 0 | 0 |
| சூலூர் எஸ். என். அற்புதசாமி | 0 | 8 | 0 |
| திருவாங்கூர் பலராமபுரம் தி. மு. க. | 3 | 10 | 0 |
| எட்டநத்தம் என். சுப்பையா | 2 | 0 | 0 |
| ஆலமரத்துப்பட்டி தி. மு. க. | 5 | 0 | 0 |
| மொத்தம் | 513 | 2 | 0 |

ஏ. வி. பி. ஆசைத்தம்பியின் வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும் இதுவரையில் மேலே குறிப்பிட்ட தொகை வசூலாகியிருப்பதாகவும் விருதுநகர் தோழர் கே. எஸ். எஸ். அய்யாசாமி பொருளாளர்) அறிவிக்கிறார்.

### பொன்மலை — கழக வழக்கு

பொன்மலை திராவிட வாலிபர் கழக வழக்கு இன்று திருச்சினாப்பள்ளி சப்டிவிஷனல்மாஜிஸ்ட்ரேட் முன் விசாரணைக்கு வந்தது. அவ்வமயம் நம் தரப்பில் திருச்சி வழக்கறிஞர் வைத்திலிங்கம் ஆஜரானார். எதிரி தரப்பில் அவர்கள் வக்கீலும் குறிப்பிட்டிருந்த சாட்சிகளும் வராததினால் மேற்படி வழக்கை 28—10—50க்கு ஒத்திபோடப்பட்டிருக்கிறது என கழக செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி தெரிவிக்கிறார்.

### சவுக்கடி வழக்கு

16—10—50ல் விசாரணைக்கு எடுப்பதாக இருந்த சவுக்கடி வழக்குமீண்டும் 2—11—50ல் வாய்தா போடப்பட்டிருக்கிறது.

### அன்பழகன்

தோழர் அன்பழகன் தமக்கு ஏற்பட்ட நோய் காரணமாக இன்னும் இரண்டு திங்கள் முடிய எங்கும் பேச ஒப்புக்கொள்ள இயலாமல் இருப்பதாகத் தெரிவிக்கின்றார்.

# கடல் கடந்து நம் கருத்து பரவுகிறது!

## பர்மா திராவிட முன்னேற்றக் கழகம்

பர்மாவில் வாழும் திராவிட மக்கள் அனைவரும் ஒன்று கூடி, தங்கள் நிலையைப் பற்றி, தாயகத்திலே பரவி வரும் இன எழுச்சியைப்பற்றி, திராவிடரின் வாழ்வு எப்படி 'வந்தவர்களால்' வதைக்கப்படுகிறது என்பது பற்றியெல்லாம் பேசினர்—1—10—50ல் கூடிய மாபெரும் கூட்டத்திலே! இரங்கோன், பீகான்டெட் வீதி 95ம் எண்ணுள்ள இல்லத்தில் மாலை 6-30 மணிக்கு தோழர் சீனுவாசன் தலைமையில் பர்மா திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடந்தது. தோழர்கள் க. நாராயணன், ஓ. கே. பாட்சா, சேந்திநாதன் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களை—கொள்கைகளை விளக்கிப் பேசினர். பர்மாவில் வாழும் திராவிடத் தோழர்கள் அனைவரும் ஒன்று கூடி, தங்கள் இன முன்னேற்றத்திற்கு உழைக்க ஒரு அமைப்பு தேவை, அந்த அமைப்பு பர்மா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கவேண்டும் என முடிவு செய்தனர்.

குழுமியிருந்த கூட்டத்திலிருந்து, கழகத்தின் ஆரம்ப வேலைகளுக்கான செலவினங்களைச் செய்ய போதிய நிதி சேர்க்கவும், தொடக்க வேலைகளைச் செய்து தரவும் ஒரு தற்காலிக செயற் குழு தெரிந்தெடுக்கப்பட்டது.

பொதுச் செயலாளர்:— ஓ. எம். சிவராமன், பொருள் உறுப்பினர்:-ஓ. கே. பாட்சா, துணைப் பொருள் உறுப்பினர்:- க. நாராயணன், கணக்கு சோதனை உறுப்பினர்:- இராமச்சந்திரன், மற்றைய உறுப்பினர்கள்:- ரா. முத்துராமன், வி. கருப்பையா, வி. சுப்பிரமணியன், கரு. பொன்னையா, ரா. நல்லுச்சாமி, மு. சீனிவாசன், லூஜி. கோவிந்தராஜன், பி. கே. அப்துல் ஹமீது, கே. எம். கணபதி, எஸ். என். ராம்தாஸ், வி. செங்கசாமி ஆகியோர்.

நிதி சேர்ப்பு வேலை முடிந்ததும், புதிய நிரந்தரச் செயற் குழு தேர்ந்தெடுப்பதெனவும், கழகத்திற்குக் கட்டிடம் ஏற்பாடு செய்வதெனவும், ஒரு நூல் நிலையம் அமைப்பதெனவும், கழக வேலைகளைக் கவனிக்க ஒருமுழு நேரத் தொண்டர் ஒருவரை நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.


## வாழ்வு விழா

அன்புடையீர்,

வரும் 2—11—50 காலை 6 மணி யளவில் எனக்கும் உயர்திரு கந்தசாமி அவர்கள் குமாரிதுரைப்பாண்டிச்சிக்கும் புதுக்குடியில் தோழர் சி. என். அண்ணாதுரை தலைமையில் திருமணம் நடைபெறும்.

அவ்வமயம், தோழர் நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி, மு. கருணாநிதி, கா. மு. ஷெரிப், கவிஞர் கண்ணதாசன் மற்றும் பலரும் வாழ்த்துரை வழங்குவர். நண்பர்கள் அனைவரும் வந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

புதுக்குடி, ஸ்ரீ வைகுண்டம், (திருநெல்வேலி மாவட்டம்.)

அன்பன், எஸ். எஸ். சிவசூரியன், சினிமா நடிகன்.

# குன்றத்தூரில் 'ஜாலியன்வாலாபாக்'!

## ஏழுமுறை துப்பாக்கிப் பிரயோகம்

### ஊரடங்குச் சட்டம் அமுல்—தடியடி, படுகாயம், சோதனை!

### 'அகிம்சா ஆட்சியின்' தர்பார்—என். வி. என்.—15 பேர் கைது

குன்றத்தூர், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றூர். இங்கு 144 தடையுத்தரவு போட்டனர், காங்கிரஸ் சர்க்கார், சென்ற 28—9—50ல் முதலில் ஒரு வாரம், பிறகு ஒரு மாதம், கடைசியாக இரண்டு மாதம் என்று நீட்டிக்கொண்டே வந்துவிட்டனர்.

26—10—50ல் தி. மு. க. தோழர்கள், பேச்சுரிமையைப் பறிக்கும் தடையை மீறி விடுவது என்று முடிவு செய்து கூட்ட அறிக்கையை வெளியிட்டுவிட்டனர்.

கூட்டத்தில், தி. மு. க. மாகாண அமைப்புக் குழுச் செயலாளரும் 'திராவிடன்' ஆசிரியருமான என். வி. நடராசன், பாலசுந்தரம், தணிகாசலம், கணபதி, இபுராகிம் ஆகியோர் பேசுவதென விளம்பரப்படுத்தப் பட்டது.

காலையிலிருந்து ஆயுதந் தாங்கிய அணிவகுப்பு பட்டாளம் ஊரை முற்றுகையிட்டு விட்டது. ஊரின் நான்கு புறங்களிலும் போலீஸ் லாரிகள் கொண்டு நிறுத்தப்பட்டுவிட்டன. ஊருக்குள் எவருமே வர முடியாமல் தடுக்கப்பட்டனர். வருகிற மோட்டார்கள், வண்டிகள் எல்லாம் சோதிக்கப் பட்டு விடப்பட்டன.

மாலை மூன்று மணிக்கெல்லாம் கூட்டம் நடப்பதாக அறிவிக்கப்பட்ட இடத்தைச் சுற்றிலும் 'அகிம்சா' ஆட்சியின் அதிகார அம்புகள் 'சக்கர வியூகம்' வகுத்துவிட்டனர்.

இத்தனைக் காவலிருந்தும், குன்றத்தூரின் சுற்றிலுமுள்ள கோவூர், பட்டு, மாங்காடு, பூந்தமல்லி இன்னும் பல ஊர்களிலிருந்தெல்லாம் ஆயிரக் கணக்கில் மக்கள் கூடிவிட்டனர்.

ரிசர்வு லாரிகள் வாயுவேகத்தில் ஊரின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றிக் கொண்டே இருந்தன. நாலைந்து பேர் சேர்ந்திருந்தாலும் தடியடி! 'அடி, உதை, குத்து, ஓடு, நிற்காதே' என்ற ஆணவ ஆர்ப்பாட்டம்!!

தனி காரில் சென்னையிலிருந்து வந்த தோழர்கள் என். வி. நடராசன், பாலசுந்தரம் ஆகியோர், ஊருக்கு வெளியே இரண்டு பர்லாங்கு தூரத்தி லுள்ள நால் ரோடில் கைது செய்யப்பட்டனர். கூட்டத்திற்குப் போன பிறகு வேண்டுமானால் கைது செய்யுங்கள் என்று என். வி. என். அறிவித்தும், அவர்கள் இருவரையும் போலீஸ் லாரியில் ஏற்றிச் சென்றனர்.

இந்தச் செய்தியை ஊரில் வந்து சொன்ன சந்திரா பஸ் சர்வீஸ் டிரைவர் கணேசனையும், கிளீனர் கணேசனையும் 'அகிம்சா ஆட்சியினர்' தாக்கினர்.

உணவுக் கடையில் சாப்பிட்டுக்கொண்டிருந்த, 'திராவிட நாடு' ஏஜண்ட் தோழர் திருநாவுக்கரசுவை, இரக்கம் துளியுமின்றி, கண்டவர் கண்ணீர் மல்கும்படி அடித்தும், உதைத்தும் துன்புறுத்தி லாரியில் ஏற்றிக் கொண்டனர்.

துண்டறிக்கைகளைக் கொடுத்த தோழர்கள் திராவிட மணி, வரதன் ஆகியோரும் அதே மாதிரியில் கொடுமைக்குள்ளாக்கப்பட்டனர்.

மாலை ஆறுமணியளவில், தோழர்கள் செல்வராஜ், கணேசன், தேவராசன், சம்பந்தன், எம். தேவராசன் ஆகியோர், கரங்களிலே கழகக் கொடிகளேந்தி, 'அடக்கு முறை ஒழிக' 'பேச்சுரிமையைப் பறிக்காதே' '144ஐ மீறுவோம்' 'நம் உரிமையை நிலை நாட்டுவோம்' என்று முழக்கமிட்டு, கூட்டம் நடைபெறும் இடத்தை நோக்கி நடந்தனர். கொஞ்சதூரம் செல்வதற்குள்ளாகவே, படை புகுந்து, கூட்டத்தை சின்னாபின்னமாக சிதறடித்து விட்டது. அவர்களையும் அடித்தும், மிதித்தும், துவைத்தும், வதைத்து லாரியில் ஏற்றினர்.

பேசுபவர்கள் என்று அறிவிக்கப்பட்ட உள்ளூர்த் தோழர்கள் தணிகாசலம், கணபதி, இபுராகிம் மாலையிலே வெளிக்கிளம்பமுடியாதபடி தடுக் கப்பட்டனர்.

இரவு ஆக ஆக, 'அகிம்சா' ஆட்சியின் மூர்க்கத்தனம் வளர்ந்து கொண்டே போயிற்று. கடைகளை அடைக்கச் சொல்லிவிட்டனர். கண்ட கண்ட தோழர்களை மிருகங்கள்போலக் காரணமின்றி தாக்கினர்.

தேரடிக் கடைத்தெருவில் கூடியிருந்த மக்களை மிகவும் கொடுமை யான முறையில் தடிகொண்டு அடித்தனர்.

அந்தோ, அகிம்சா ஆட்சியிலே சுட்டனர், சுட்டுக்கொண்டே இருந் தனர், மக்கள் சுருண்டு விழும்வரை சுட்டனர்—ஒரு முறை இருமுறை மட்டுமல்ல! — எண்ணி ஏழு முறைகள்! காந்தியார் வழிவந்த காருண்ய வான்கள் சர்க்காரிலே துப்பாக்கி துரைத்தனம் நடந்தது — குண்டும் தாக்கி மூவர் படுகாயமடைந்தனர்.

குட்டி என்னும் பச்சை, தேவராஜ், இன்னொருவர் ஆக மூன்று தோழர்கள் குண்டடிபட்டு விழுந்தனர்—பிணமென சாய்ந்தனர். 'பஞ்சாப் படுகொலை'யும் தோற்றிடும் வகையில்! இருவர் சென்னை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கூட்டத்திற்கு வந்தவர்கள் ஆயிரமாயிரம் பேரும் அன்று பட்டினி—ஊரடங்குச் சட்டம் போட்டுவிட்டனர்.

இரவில் வீடுகளிலும் புகுந்து மிரட்டினர்—கண்டபடி திட்டினர்—காரணமின்றித் தாக்கினர்.

வெளியூர்த் தோழர்களுக்கு தங்க இடம் தந்தார் என்று காரணங் காட்டி மேட்டுத்தெரு மாணிக்கனார், சொக்கலிங்கனார், ஜம்புலிங்கனார், துரைசாமியார் போன்ற ஊர்ப் பெரியவர்களின் வீடுகளின் உள்நுழைந் தும், கதவுகளைப் பிளந்தும், மாடிவழி ஏறிக்குதித்தும், வீட்டுத்தாய்மார் கள் வீறிட்டுக் கதற, குழந்தைகள் பயத்தால் கோவென அழஅழ, ஆபாச மான வார்த்தைகளால் திட்டி அவமானப் படுத்தியும், பயங்காட்டியும் காட்டுப் போக்கிலே நடந்து கொண்டுள்ளனர், மக்களை ஆளவந்த சுயராஜ்ய ஆட்சியினர்!

கூட்டத்து நடவடிக்கைகளைக் கவனிக்க 'போர்வாள்' சார்பில், காஞ்சி—கல்யாணசுந்தரம், 'திராவிடநாடு' சார்பில் ஆர். கே. மூர்த்தி ஆகியோர் முதல்நாள் சென்றிருந்தனர்.

27—10—50 காலை காஞ்சியிலிருந்து, தோழர்கள் 'சுழத்தடிகள்' புட்டாசாமி, கணபதி, தில்லை—வில்லாளன், ஆகியோர் குன்றத்தூர், மாங் காடு, பூந்தமல்லி ஆகிய ஊர்களுக்கு நேரில் சென்று விவரங்களை அறிந்து வந்தனர்.

இதுவரை சேகரிக்கப்பட்ட தகவலிலிருந்து நாம் அறியும் விவரங்கள்:—

துப்பாக்கிப் பிரயோகத்தால் மூவர் படுகாய மடைந்தனர்.

தடியடியால் தாக்கப்பட்டவர்கள் பட்டியல் பெரிது. கிடைத்தவரை கீழே தரப்பட்டுள்ளது.

துரைக்கண்ணு, இரத்தினம், பார்த்தசாரதி, சுப்பிரமணியன், மாசிலாமணி, குப்புசாமி, பி. எம். மணி, கே. முனுசாமி, மேப்பூர் கோவிந்தராசு, முனிசாமி, சோமசுந்தரம், வி. எல். ராஜாபாதர், தாமோதரன், நடேசன், பானு, கிருட்டிணன், கங்காதரன், தெய்வசிகாமணி, சபாபதி, ஏழுமலை, எம். நடராசன், தேவராசன் இன்னும் நூற்றுக்கணக்கானவர்.

காஞ்சி திராவிட மறுமலர்ச்சிக் கழகச் செயலாளர் தோழர் சபாபதிக்கு மண்டையிலே பலத்த அடி. இரத்தம் ஒழுக ஒழுக தாக்கப் பட்டார். அவரும் கைது செய்யப்பட்டார்.

இதுவரை கைது செய்யப்பட்டுள்ளவர் பதினைந்து பேர்களுக்குமேல்—தோழர்கள் என். வி. நடராசன், பாலசுந்தரம், செல்வராஜ், திருநாவுக்கரசு, திராவிட மணி, வரதன், தாமோதரன், காஞ்சி. சபாபதி, பாலகிருஷ்ணன், ஏழுமலை மற்றும் அறுவர். அவர்கள் பெயர் விவரம் இன்னும் கிடைக்கவில்லை.

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

20—10—50 அன்று காலை 11-மணியளவில் பாதைகளில் ஒழுங்கீனமாகவும், முறைகெட்ட போக்கிலும் நடந்துகொண்டார்கள் என்ற குற்றஞ் சாட்டப்பட்ட 34 தோழர்களை யெல்லாம் நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்றனர்.

மற்ற முன்னணி வீரர்களை 1 மணிக்கு போலீஸ் கமிஷனர் பணிமனைக்கு அழைத்துச் சென்று, பிறகு அவர்கள் காவலில் வைக்கப்பட் டிருந்த நிலையங்களுக்குவந்து அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்களையெல்லாம் திரும் பத்தந்து நிபந்தனையின்றி விடுதலை செய்தனர்.

தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற சேதி காட்டுத்தீபோல பரவிவிட்டது. இரவு 9-மணிக்கு தோழர்கள் டி. எம். பார்த்தசாரதி, மு. கருணாநிதி, இராம. அரங்கண்ணல் வந்து கண்டு பேசிவிட்டுச் சென்றனர். பத்து மணிக்கு தோழர் டபிள்யு கே. தேவராசன் வந்து சென்றார். மறுநாள் காலையில் தோழர்கள் கண்ணதாசன், கே. ஏ. மதியழகன், திருச்சி முத்து கிருஷ்ணன் வந்து தோழர்களைப் பார்த்துவிட்டுச் சென்றனர். காலையிலிருந்தே, இராயப்பேட்டைத் தோழர்கள் வெளியிலிருந்தே வேண்டிய எல்லா உதவிகளையும் செய்துகொண்டிருந்தனர்.

அடக்குமுறையைக்கண்டு தோழர்கள் சிரித் தார்கள் — யாரும் அடங்கிவிடவில்லை. அடக்கு முறையினால் அழிந்துபட்ட சாம்ராஜ்யங்கள் வர லாற்றில் பல கண்டும் காங்கிரஸ் அதே பாதை யிலே ஓடுகிறது!

கோட்டை வெளியிலும், ராயப்பேட்டை யிலும் நடைபெற்ற "அகிம்சா ஆட்சி" கண்டு நகரே கொந்தளித்துக் கிடந்தது. திவாகருக்குக் கருப்புக்கொடி காட்டப்பட்டபோது காணப் படாத பேருணர்ச்சி எங்கும் பரவிக் கிடந்தது.

அடக்குமுறை வீச வீச அஞ்சிவிட மாட் டோம்! உதைக்க உதைக்க உந்தி எழும் பந்து நமது கழகம்! இதை யுணராது, நடந்துகொண் டது காங்கிரசாட்சி. பரிதாபம்! கேவலம்!! மறை யாத களங்கம்!!!

தமிழ்நாடு உள்ளவரையில் மேற்படி கோரச் சம்பவம், மறையாது. சென்னையில் இதுபோன்ற "கொரில்லா வேட்டை" வெள்ளையன் காலத்தில் கூட நடந்ததில்லை. ஆனால் இப்போது நடந்தது. "நம்மவர்" ஆட்சியிலே நடந்தது! "அக்கிரமம்! அநீதி!" என்று ஆத்திரத்தால் நாம், இந்த ஆள வந்தார்மீது சீறவில்லை. கண்களிலிருந்து வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, கேட்கிறோம், "மனிதர்களை மிருகம்போல வேட்டையாடி வேதனையைத் தீர்த்துக் கொள்வதா? சொந்த நாட்டவரை, சொந்தச் சகோதரர்களை நீங்கள் நடத்தும் முறையா, இது? இதுதான் சுயராஜ்யமா? இதற்குத்தானா பாடுபட்டீர்கள்?" என்று வேதனையோடு கேட்கிறோம்—காங்கிரஸ் மந்திரிமார்களே, தலைவர்களே, தொண்டர்களே!

பதில் கூறவேண்டாம் — உங்கள் இதயத் தைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

குமரன் வீதியிலே வீழ்ந்த காட்சி, பஞ்சாப் படுகொலை நிகழ்ந்த சம்பவம் மீண்டும் திரும்பு கிறது!

சரித்திரம் திரும்புகிறது! உரிமை வேட்கை யின் புது அத்தியாயம் அரும்புகிறது! அடக்கு முறையோடு அரும்புகிறது!!

Edited Printed & Published by C. N. Annadurai M A at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street Kancheepuram